செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி	௨௩௧
பராபரக் கண்ணி - ஓர் ஆய்வு	௨௫௧
இசைத்துறையில் அடிமைநிலை	௨௬௪
ஆப்பிரிக்கச் சுற்றுலா	௨௬௭
சேச்சுத் தமிழில் - ஒரு புதிய பண்பு விகுதி	௨௭௭
புலிசைப் பத்து	௨௮0
தமிழில் எழுதுவோம்	௨௮௩
சீர்திருத்தத் தந்தை பெரியாரின் பெரும் பிரிவு	௨௯௨
இரங்கல் உரைகள்	௨௯௫
இரங்கற் பாக்கள்	௨௯௭
கோவை அறிவியல் கோவேந்தர்	௨௯௮
அதிசய மனிதர் ஜி. டி. நாயுடு	௨௯௯
திரு. பி. எம். பொன்னுசாமி முதலியார் மறைவு	௩00
செய்திகளும் குறிப்புகளும்	௩0௬

சிலம்பு ௪௮] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௪, மார்கழி (Jan'74) [பரல்-௫

'செந்தமிழ்ச் செல்வி'

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. டாக்டர் ந. சஞ்சீவி, எம். ஏ., பி.எச்டி.
தமிழ்த்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்

உ. 'சித்தாந்த கலாநிதி', உரைவேந்தர்,
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், மதுரை

ங. திரு. கொண்டல், சு. மகாதேவன் அவர்கள், எம். ஏ., பி. எஸ்ஸி
இயக்குநர், தமிழகவரசு தமிழ் வளர்ச்சித்துறை.

ச. செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., டிப். லிங்.
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

ரு. செந்தமிழ்க் கலைமணி, வித்துவான்,
பண்டித, கா. பொ. இரத்தினம் அவர்கள்,
பி.ஏ. (ஆனர்சு), (லண்டன்) எம்.ஏ., பி.ஓ.எல். (சென்னை)
கொழும்பு.

சு. புலவர் இரா. இளங்குமரன்,
திருநகர், மதுரை-6.

எ. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.
நூலகர், மறைமலையடிகள் நூல்நிலையம், சென்னை.

'செந்தமிழ்ச் செல்வி' தொகுதிகள்

கலைக் களஞ்சியம்போல் பயன்படக் கூடிய 'செந்தமிழ்ச் செல்வி' பழந்தொகுதிகளில் ஒரு சிலவே கிடைக்கப்பெறும். இவை நூல் நிலையங்களிலும், ஆராய்ச்சியாளரிடத்தும் பேணி வைக்கப்பெற வேண்டிய அரிய தொகுதிகளாகும்.

கிடைக்கக் கூடிய சிலம்புகள் :

2, 3, 4; 5; 8, 24 முதல் 47
துணிக்கட்டடம் செய்யப்பட்டவை

தனித்தனி விலை ரூ. 12-00

15·1·7

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு ௨௦௦௪, மார்கழி	பரல்
௪௮	சனவரி 1974	௫

திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி

(முன் ௨௦௭ ஆம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் போப் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலின்கண் பின் இணைப்பாகத் தவத்திரு துரூ இயற்றிய முதல் 63 அதிகாரங்களின் ஆங்கில மொழிபெயர்ப்பும், தவத்திரு லாசரசு இயற்றிய பின் 73 அதிகாரங்களின் ஆங்கிலமொழி பெயர்ப்பும் சேர்க்கப்பெற்றுள்ளன என்பது முன்னிதழிற் கண்டோம். அவை 1886 இல் புட்பரத செட்டியார் அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்ற திருக்குறள் தெளிபொருள் விளக்கவுரையோடு காணப்பெறுகின்றன.

திருக்குறள் துரூ, லாசரசு ஆங்கில மொழிபெயர்ப்பு

திருக்குறள் தெளிவுரையளவில் அவற்றை மட்டும் தனியே கையடக்கப் பதிப்பாக வெளியிடக் கருதி 1972 ஆம் ஆண்டில் 13/9 செ. மீ. அளவில் 1458 ஆம் எண் கழக வெளியீடாக அச்சிட்டுள்ளோம். அதன்கண் ஒவ்வோர் அதிகாரமும் ஒரே பார்வையில் படிக்கும்பொருட்டு இடமும் வலமுமாக இரு பக்கங்களில் எதிரெதிரே அமைக்கப்பட்டிருக்கிறது. அட்டைக் கட்டடமும் பரிசுக்காகப் பிளாஸ்டிக் கட்டடமும் செய்யப் பெற்று ஆங்கிலங் கற்றவர்கட்கு இப்பதிப்பு நன்கு பயன்படுகின்றது.

இதுகாறும் உலகப் பொதுமறையாந் திருக்குறளைப்பற்றிக் கழகம் வெளியிட்ட பல்வகை நூல்களின் சிறப்பினையும்

அவற்றின் ஆசிரியர்கள் வரலாற்றினையும் ஒருவாறு அறிந்து மகிழ்வுற்றோம்.

இனித் தமிழ்நாட்டிலும், பிற நாடுகளிலும் திருக்குறளைப் பற்றி இதுகாறும் வெளியிடப்பெற்ற உரைகள், உரைவளம், திறனாய்வுகள், உரைநடை, கதைகள், திருக்குறளை அமைத்து அதன் கருத்தை விளக்கும் வெண்பா நூல்கள். பன்மொழி களில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் ஆகியவற்றை யெல்லாம் கூடுமானவரை ஒன்றும் விடாமல் தொகுத்து ஆராய்ச்சியாளர் கட்குப் பயன்படும் வகையிற் கழகம் பேணிப் பாதுகாத்து வைத்திருக்கும் பாங்கினை அறிவோம்.

இங்ஙனம் நூல்களைத் தொகுப்பதற்கும் அவற்றை ஆராய்ச்சியாளர்கட்குப் பயன்படுத்துவதற்கும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் அமைப்பு முறையே காரணம் என்பதைத் தெரிந்துகொள்வது முதன்மையாகும்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நூல் வெளியீட்டுக் கென 1920இல் திருநெல்வேலியில் பதிவு செய்யப்பெற்ற மட்டிட்ட கூட்டுப்பங்கு நிறுவனமாகும். பழந்தமிழ் இலக்கண இலக்கியங்கள் முதல் பிற்கால இலக்கண இலக்கியங்கள்வரை எல்லாவற்றையும் உரை விளக்கங்களுடன் வெளியிடுவதும், பிறமொழியாளர்கட்குப் பயன்படும் வகையில் உலகப் பொது மறையாந் திருக்குறளையும், மற்றும் இலக்கியங்களையும் ஆங்கி லத்திலே மொழிபெயர்த்து வெளியிடுவதும், தமிழ்மொழி, தமிழ்ப் பெருமக்கள், தமிழ்நாடு ஆகியவற்றைப் பற்றிய வரலாறுகள் பள்ளி, கல்லூரிகட்கு வேண்டிய பாடநூல்கள், குழந்தைகட்கு வேண்டிய கதைகள், பாடல்கள், அறிவியல் நூல்கள் ஆகிய பலதுறை நூல்களை வெளியிடுவதும் அதன் சீரிய நோக்கங் களாகும்.

கழகப் புத்தக விற்பனையினால் கிடைக்கப்பெறும் ஊதியத்தில் நூற்றுக்கு 6க்கு மேல் பெறப் பங்காளிகட்கு உரிமையில்லை. ஊதியத்தில் நேர்பாதி கழகத்தின் அறநிலையங்களாகிய தென் னிந்திய தமிழ்ச் சங்கத்திற்கும் தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்திற்கும் வழங்கப்பெறுகின்றது. இவ்விரண்டு சங்கங் களும் பதிவு செய்யப்பெற்றுள்ளன.

சென்னையில் மறைமலையடிகள் நூல்நிலையமும் நெல்லையில் சிவஞானமுனிவர் நூல்நிலையமும் தென்னிந்திய சைவசித் தாந்த சங்கத்தின்வழி நடைபெறுகின்றன. பல்லாவரம் மறை மலையடிகள் கலைமன்றமும், நெல்லையில் குமரகுருபரர் குழந்தைப்

பள்ளியும், புலவர் கல்லூரியும் தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின்வழி நடைபெறுகின்றன.

சென்னை மறைமலையடிகள் நூல்நிலையத்திலே மறைத்திரு மறைமலையடிகளார் தொகுத்து வைத்திருந்த நாலாயிர நூல்களோடும் கழகம் இதுகாறும் தொகுத்துள்ள 25,000க்கு மேற்பட்ட நூல்களும் ஆராய்ச்சியாளர்கட்குப் பயன்பட்டு வருகின்றன. அவற்றில் திருக்குறளைப்பற்றி வெளிவந்துள்ள நூல்களனைத்தும் பேணி வைக்கப்பெற்றிருக்கின்றன.

நூல்களைத் தொகுக்கலாம்; ஆனல் தொகுத்தவற்றை ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படும் வகையில் பேணிப் பாதுகாத்து நிரல்பட வைப்பதற்கு நூல்நிலையமும், அதனைப் பொறுப்போடு நடத்துவதற்கு நூலகவியற் பட்டம் பெற்ற நூலகரும் இல்லாவிடில் அவை யாருக்கும் பயன்படாமல் ஒழிந்து போகும் என்பது சொல்லாமலே விளங்கும்.

மறைமலையடிகள் நூல்நிலையத்திலே தமிழில் முதுகலைப் (எம். ஏ.) பட்டமும், நூலகவியலில் இளங்கலை (பி. லிப்) பட்டமும் பெற்றவரும் கழக ஆட்சியாளரின் இளைய மருகருமாகிய திரு. இரா. முத்துக்குமாரசாமி நூலகராகப் பணிபுரிவதும், அந் நூல் நிலையம் திருவருட்பேரொளி வள்ளல் இராமலிங்க அடிகள் தமது 9ஆவது அகவையில் முதன் முதல் பேசிய வரலாற்றுப் புகழ்பெற்ற பெரிய ஈரடுக்குக் கட்டடத்தில் அமைந்திருப்பதும் நூலாய்வின் பொருட்டு வருகிறவர்கட்கு மகிழ்ச்சியூட்டுகின்றன.

மறைமலையடிகள் நூல்நிலையத்திலே திருக்குறள் பற்றிய பல்வேறு நூல்களோடு தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பெற்ற கட்டுரைகள் அடங்கிய பழைய இதழ்களையும், இக்காலத்து இதழ்களையும், பல்வேறு மலர்களையும் தொகுத்து வைத்திருப்பதோடு அக் கட்டுரைகட்கெல்லாம் அகரவரிசை அட்டவணை (Index) எழுதப்பட்டுள்ளது. எங்களிடமில்லாமல் பிற நூல்நிலையங்களிலிருக்கும் இதழ்களிலுள்ள கட்டுரைகளைத் தட்டச்சுப் பொறியில் படி எடுத்து அவற்றிற்கும் அகரவரிசை அட்டவணை எழுதப்பெற்றுள்ளது. திருக்குறள் பற்றி அவ்வப்போது வெளிவரும் புதிய நூல்களும், மலர்களும் வாங்கிச் சேர்த்துவைக்கப் பெறுகின்றன.

இனிப் பிறமொழிகள் எவ்வெவற்றில் திருக்குறள் மொழி பெயர்க்கப் பெற்றிருக்கின்றது என்பதனையறிவோம்.

முதன்முதல் 1747இல் இலத்தீன் (Latin) மொழியிலேதான் தவத்திரு பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் திருக்குறள்

முதலிரண்டு பால்களை மட்டும் மொழிபெயர்த்தனர். ஆனால் அது நூல்வடிவில் வெளிவராமல் இருந்தது. டாக்டர் போப் அவர்கள் 1886இல் அச்சிட்ட தமது ஆங்கில மொழிபெயர்ப்பு நூலின் பின்இணைப்பாக அது சேர்க்கப்பெற்றுள்ளது. சார்லசு கிரால் (Charles Graul) என்பவரும் 1865இல் இலத்தீனில் மொழிபெயர்த்துத் தமிழ் உரையோடு தரங்கம்பாடியில் வெளியிட்டுள்ளனர். இலத்தீனில் மொழிபெயர்த்த இருவரும் தமிழ் கற்றுப் புலமை பெற்றவர்களாவர்.

1820இல் செருமன் (German) மொழியில் ஏ. எஃப். சேமர்சும் (A. F. Cammers), ஃபிரிடெரிக் ரிக்கட் (Friederich Rickert) என்பவரும் ஒரு பகுதியினையும், 1886இல் கிரால் (Graul) என்பவர் முழுவதையும் மொழி பெயர்த்துள்ளனர். இவர்களும் தமிழைக் கற்றுப் புலமை பெற்றவர்களாவர்.

கைவல்ய நவநீதம் என்ற வேதாந்த நூலைக் கிரால் (Graul) ஆங்கிலத்திலும், செருமனியிலும் மொழிபெயர்த்துள்ளனர் என்பதும் அந்நூற்படியினை டாக்டர் போப் தாம் படித்த தமிழிலுள்ள கைவல்ய நவநீத உரை நூலோடு ஒப்பிட்டுப் படித்துள்ளனர் என்பதும் முன் இதழில் படித்தோம்.

1876இல் பிரஞ்சு (French) மொழியில் திருக்குறள் முழுவதும் லூயிசு ஜெகோலியட் (Louis Jacolliot) என்பவராலும், 1942இல் ஞானதியாகு (Gnana Diagoo) என்பவராலும் மொழி பெயர்க்கப்பெற்றுள்ளது. 1848இல் இ. ஏரிய (E. Ariel) லும், 1856இல் பி. ஜி. டுமாஸ் (P. G. Dumast) டும், 1867இல் எம். லெமாரிசெ (M. Lamairesse) யும் 1889இல் பாரிக் (Barrigue), பான்றெனி (Fontainiew) ஆகிய இருவரும் சேர்ந்து திருக்குறளில் ஒவ்வொரு பகுதியினைமட்டுமே மொழி பெயர்த்துள்ளனர். இவர்களும் தமிழைக் கற்றவர்களாவர்.

1886இல் ஆங்கிலத்திலே முதன்முதல் திருக்குறள் முழுமையும் பாவினத்தில் மொழி பெயர்த்தவர் மதிப்புக்குரிய டாக்டர் போப் அவர்களேயாவர். 1794இல் கிண்டர்சிலியும் (Kindersley), 1812இல் எப். டபிள்யூ எல்லி(F. W. Ellis)சும், 1871இல் சார்லசு இ. கோவ (Charles E. Gover)ரும், 1872இல் எட்வர்டு சூவிட் ராபின்சனும் ஒரு பகுதியை மட்டுமே வெளியிட்டவர்களாவர். இவர்களில் எட்வர்டு சூவிட் ராபின்சன் தாம் வெளியிட்ட தமிழ் அறிவுக்களஞ்சியம் (Tamil Wisdom) என்ற நூலில் முதல் 20 அதிகாரங்களையும், 1886இல் தாமே வெளியிட்ட தென்னிந்தியக் கதைகளும், பாக்களும் (South Indian

Tales and Poems) என்ற நூலில் முதல் இரண்டு பால் (108 அதிகாரங்)களையும் மொழி பெயர்த்துள்ளனர்.

தமிழகத்திலே 1916இல் தமிழறிஞர் வ. வே. சு. ஐயர் அவர்கள் தாம் முதன்முதல் திருக்குறள் முழுவதையும் ஆங்கிலத்திலே மொழிபெயர்த்துப் பெருமைக்குரியவரானார். அம்மொழி பெயர்ப்பு விவிலிய நூல் நடைபோன்றதென அறிஞர்களால் பாராட்டப்பெறுகின்றது. அதனையடுத்து 1931இல் தமிழகத்திலே கிறிஸ்தவ சமயத் தொண்டர் தவத்திரு எச். ஏ. பாப்ளியும் (H. A. Popley), 1933இல் திரு ஏ. அரங்கநாத முதலியாரும், 1942இல் பேராசிரியர் மு. சி. பூரணலிங்கம் பிள்ளையும், 1948இல் பேராசிரியர் வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதரும், 1950இல் எம். ஆர். இராசகோபால் ஐயங்காரும், 1953இல் பேராசிரியர் அ சக்கரவர்த்தி நயினாரும், 196 இல் திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியமும், 1968இல் தவயோகி சுத்தானந்த பாரதியாரும், 1969இல் டி. கே. ஊமனும், 1970இல் கஸ்தூரி சீனிவாசனும் திருக்குறள் முழுவதையும் மொழிபெயர்த்தவர்களாவர்.

இவற்றில் பேராசிரியர் இராமச்சந்திர தீட்சிதர் ஆங்கிலங் கற்றவர்களுக்காகத் திருக்குறள் மொழி பெயர்ப்பை (Translation)யும் எழுத்துப் பெயர்ப்பை (Transliteration)யும் எதிரெதிரே அமைத்து ஒரு பதிப்பை வெளியிட்டுள்ளனர் என்பது அறிதற்பாலது. தவயோகி சுத்தானந்த பாரதியார் தாம் பாவினத்தில் எழுதிய ஆங்கிலப் பாவின் மொழி பெயர்ப்பினை இடப்பக்கம் அமைத்தும் உரை நடையில் விளக்கி எழுதிய அதன் பொருளை (Prose rendering) வலப்பக்கம் அமைத்தும் மற்றொரு பதிப்பினைக் கழகம் 1972இல் வெளியிட்டுள்ளது.

மேலே கூறியவற்றிலிருந்து மேனாட்டறிஞர்களே முதன் முதல் திருக்குறளை உலகப் பொதுமறையென்று உணர்ந்து உலகிலே அதன் கருத்துகள் பரவுதல் வேண்டுமென்று இலத்தீன், செருமன், பிரஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்த்தனர் என்பது அறிந்து போற்றுதற்குரியது.

1916இல் திருமதி திருநாவுக்கரசும், 1952இல் திரு. அ. மாதவையாவும், 1926இல் எஸ். எம். மைக்கேலும், 1937இல் திரு. சி. இராசகோபாலாச்சாரி (இராஜாஜி) யாரும், 1955இல் ஐ. டி. தங்கசாமியும், திருக்குறளில் ஒரு பகுதியைமட்டும் மொழிபெயர்த்துள்ள தமிழறிஞர்களாவர்.

இவர்களில் திருமதி திருநாவுக்கரசு 366 திருக்குறட் பாக்களைப் பொறுக்கி எடுத்து மொழிபெயர்த்து முதன்முதல் நாட்குறிப் (Diary) பை வெளியிட்டவராவர்.

தஞ்சையிலிருந்து யாழ்ப்பாணஞ் சென்ற தமிழ்ப் பெருமகனர் சர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் திருமகளாரை மணந்து இராமநாதன் கல்லூரி முதல்வராகவும், பின்னர் இலங்கை அரசிலே அமைச்சராகவும் இருந்த மதிப்புமிக்க திரு சு. நடேச பிள்ளை அவர்கள் திருக்குறளில் 25 பாக்களை மட்டும் பொறுக்கி எடுத்து ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து இலங்கையில் பதிக்கப்பெற்ற மலரொன்றில் வெளியிட்டுள்ளனர். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்திலே டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை 1955இல் தம் அன்னையார் பெயரில் நிறுவிய சொரணம்மாள் அறக்கட்டளையின் சார்பில் 1959 பிப்ரவரி 25, 26, 27 ஆகிய மூன்று நாட்களில் ‘திருவள்ளுவர் காலம்’ (The Age of Tiruvalluvar) என்னும் பொருள்பற்றி ஆங்கிலத்திலே குறிப்பொன்றுமில்லாமலே கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்ச் சொற்பொழிவாற்றினர். அப் பேச்சு எழுத்துருப் பெருமல் போனமை தமிழர் தம் தவக்குறையேயாகும். அச் சொற்பொழிவை நிகழ்த்துவதற்கு முன் அதற்கு வேண்டிய சில குறிப்புக்களைத் தொகுத்துத் தரும்படி கழக ஆட்சியாளர்க்கு அவர் எழுதியபடி அவை கொடுக்கப்பெற்றன.

சென்னை மாநில மாவட்டக் கல்வி அதிகாரியாகவிருந்தவரும் கழக வெளியீடான **நீதிநூல்** பத்து (Ten Tamil Ethics) என்ற நூலை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்தாக்கியவருமான பன்மொழிப் புலவர் திரு தி. பொ. கிருட்டிணசாமி முதலியார் எம்.ஏ., பி.எல். அவர்கள் கழகத் திருக்குறள் நாட்குறிப்பிலே திருக்குறளை மொழிபெயர்த்தெழுதினர். ஆனல் அம் (Thirukkural Diary) மொழிபெயர்ப்பு நூலுருப்பெறவில்லை.

திராவிட மொழிகளுள் முதன்முதல் 1892இல் திருக்குறள் முழுதும் தெலுங்கிலேதான் நரசிம்மலு நாயுடு மொழிபெயர்ப்பு வெளிவந்தது. அதன்பின் 1948இல் சீராமலு மொழிபெயர்ப்பும், 1952இல் சகந்நாத சாத்திரி மொழிபெயர்ப்பும், 1956இல் சீபதி சாத்திரி மொழிபெயர்ப்பும் வெளிவந்துள்ளன. கன்னடமொழியில் ஒரு பகுதி மட்டும் 1955இல் குண்டப்பா மொழிபெயர்த்த நூல் வெளிவந்தது. மலையாளமொழியில் நூல் முழுமைக்கும் 1957இல் கோபால குருப் மொழிபெயர்ப்பும், இராமகிருட்டின பிள்ளை மொழிபெயர்ப்பும் வெளிவந்துள்ளன.

தெலுங்கில் 1954இல் ஒரு பகுதியை மட்டும் இராதா கிருட்டிண சர்மாவும், 1955இல் ஜலையா என்பவரும் மொழிபெயர்த்துள்ளனர். மலையாளத்தில் 1915இல் ஒரு பகுதியை மட்டும் கோவிந்த பிள்ளையும் 1951இல் தாமோதரம் பிள்ளையும்

மொழிபெயர்த்துள்ளனர். இவர்கள் யாவரும் தமிழ் கற்றவர்களாவர்.

உள்நாட்டு மொழிகளில் சமற்கிருதத்தில் 1952இல் ஒரு பகுதியை மட்டும் அப்பா தீட்சிதரும் 1961இல் சீராம தேசிகனும் மொழிபெயர்த்துள்ளனர். இந்திமொழியில் முழுதும் 1924இல் சீமானந்த் ரகீத்தும், 1952இல் பி. டி. ஜெயினும், 1958இல் சென்னைப் பல்கலைக் கழக இந்திப் பேராசிரியர் டாக்டர் சு. சங்கர்ராஜு நாயுடுவும், 1964இல் ஒரு பகுதி மட்டும் எம் ஜி. வெங்கடகிருட்டிணனும் மொழிபெயர்த்துள்ளனர். இவற்றில் தென்பாண்டி நாட்டிலே தமிழ்க்குடியிலே பிறந்த டாக்டர் சங்கர்ராஜு நாயுடு அவர்களது இந்தி மொழிபெயர்ப்பு கருத்துப் பிறழாமல் அமைந்துள்ளதென்று இந்தி பேசும் மக்களால் பாராட்டப்படுகின்றது.

மராத்திமொழியில் முழுதும் 1948இல் பி. எஸ். சானியும், குஜராத்தி மொழியில் முழுதும் 1931இல் நஞ்சன் கலால் ஜோக்கியும், வங்காள மொழியில் முழுதும் 1937இல் நளினி மோகன் சன்யாலும், உருது மொழியில் முழுதும் 1965இல் அசரத் சுகர்வார்டியும் மொழி பெயர்த்துள்ளனர்.

வெளிநாட்டு மொழிகளில் 1967இல் சீன மொழியிலே முழுதும் செங் ஷி யால் மொழிபெயர்க்கப்பெற்றுள்ளது. ருஷிய மொழியில் முழுதும் 1968இல் யூரி இலாசோவாலும், சிங்கள மொழியில் முழுதும் 1961இல் செல்வி மிசிகமியும், மலேசியா மொழியில் ஒரு பகுதி மட்டும் 1964இல் இஞ்சே ரமலி பின் ஹாஜி நாஹிரும், பர்மா மொழியில் முழுதும் 1964இல் யு மியோ தாண்டும், ஃபிஜி (Fiji) மொழியில் முழுதும் 1964இல் சாமுவேல் பெர்விக்கும் மொழிபெயர்த்துள்ளனர்.

இவற்றில் வங்காள மொழிபெயர்ப்பு நூல் மட்டும் எத்துணை முயற்சி செய்தும் கிடைக்கப் பெறவில்லை. அது கல்கத்தாவிலுள்ள இந்திய நாட்டுப் பொது நூலகத் (National Library) தில் இருப்பதறிந்து முகப்பு முதல் சில பக்கங்களை மட்டும் படம் பிடித்து வாங்கி மறைமலையடிகள் நூலகத்தில் மற்ற மொழி பெயர்ப்பு நூல்களோடு காட்சியில் வைக்கப் பெற்றிருக்கிறது.

இவற்றில் பர்மா மொழிபெயர்ப்பும், ஃபிஜி மொழிபெயர்ப்பும் கழக ஆட்சியாளர் அனுப்பிவைத்த ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களைக் கொண்டே மொழிபெயர்க்கப்பட்டனவாகும் என்பது அறிதற்பாலது.

திருக்குறளை அயல் மொழிகளில் மொழி பெயர்ப்பவர்கள் ஆங்கில மொழி பெயர்ப்பு நூல்களில் ஏதாவதொன்றை மட்டும் எடுத்துக்கொள்வது வழக்கம். ஆனால் ஃபிஜி மொழியில் மட்டும் அதன் ஆசிரியர் பெர்விக் அங்ஙனம் செய்யாமல் எந்தக் குறளுக்கு எவர் மொழிபெயர்ப்பு தமக்குப் பிடித்தமானதோ அதனை எடுத்து மொழிபெயர்த்துள்ளனர் என்பது ஒவ்வொரு குறள் முடிவிலும் V. V. S., M. S. P., C. R. என வளைவுக் கோடுகட்குள் காணப்படுவதால் விளங்கும்.

1862இல் டாக்டர் உவின்சுலோ தொகுத்து அச்சிட்ட தமிழ் ஆங்கிலப் பேரகராதியிலுள்ள சொற்பொருள் விளக்கங்கள் சிலவற்றில் மேற்கோளாக எடுத்தாண்ட திருக்குறள் பாக்களைத் தாமே ஆக்கிய ஆங்கில மொழிபெயர்ப்போடு அமைத்துள்ளனர்.

1893இல் டாக்டர் மக்ளீன் தொகுத்து வெளியிட்ட சென்னை மாநில ஆட்சி முறை ஏடு (Manual of Administration of the Madras Presidency) மூன்று தொகுதிகளையுடையது. மூன்றாந் தொகுதியில் சிறப்புப் பெயரகரமுதலி 1000 பக்கங்கட்குமேல் உள்ளது. அதன்கண் பல குறட்பாக்கள் தவத்திரு துரூவும், தவத்திரு லாசரசும் ஆக்கிய ஆங்கில மொழிபெயர்ப்போடு காணப்பெறுகின்றன.

மேலே கூறப்பட்ட மொழிபெயர்ப்பு நூல்கள் சிலவற்றின் ஆசிரியர்கள் தாமே தமிழைக் கற்றுப் புலமை பெற்றும், மற்றுஞ் சிலவற்றின் ஆசிரியர்கள் தமிழ்ப் புலவர் துணைகொண்டும் மொழிபெயர்த்துள்ளனர் எனத் தெரியவருகின்றது

மேலே குறிப்பிடப்பெற்ற மொழிபெயர்ப்பாசிரியர்கள் பெரும்பான்மையோர் உருவப் படங்களை யெல்லாந் தொகுத்து 1968 திருவள்ளுவர் மலரில் வெளியிட்டிருக்கிறோம். அவை படக் காட்சியிலும் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

வெளிநாட்டுச் சிறந்த சில மொழிகளிலும் உள்நாட்டு மொழிகள் பலவற்றிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்திருந்த போதிலும் அதன் கருத்துக்கள் அவ்வம் மொழிபேசும் மக்களிடம் நன்கு பரவியுள்ளனவா என்று கேட்பின் இல்லை என்றுதான் சொல்லவேண்டியதாகும்.

திருக்குறளுக்கு எத்தனையோ உரைகளும் உரை விளக்கங்களும் வந்தும், அவை பல பதிப்புக்களைப் பெற்றுங்கூடத் தமிழ் நாட்டிலே திருக்குறளைப் படிக்காத, அறியாத மக்கள் எண்ணிறந்தவராவர். அது உரைவிளக்கம் பெறாமல் மூலச்சுவடியாகவே

இருப்பின் எத்தனை பேர் படித்தறியக் கூடும்? இங்ஙனமிருக்கப் பிற மொழிகளில் வெளிவந்த மொழிபெயர்ப்புக்களைக் கொண்டு அவ்வம்மொழி பேசும் மக்களில் எத்தனை பேர் திருக்குறளின் பொருளை அறிதல் கூடும்.

ஆதலால் முதற்கண் திருக்குறளைத் தமிழில் எளிய நடையில் தமிழிலக்கியங்களிலிருந்தும் விவிலியம், கொரான், ஆங்கில இலக்கியங்கள் முதலியவற்றிலிருந்தும் மேற்கோள்களை எடுத்து விளக்கி எழுதுதல் வேண்டும். பின்னர் அதனை ஆங்கிலத்திலே எளிய நடையில் மொழிபெயர்த்தல் வேண்டும். அம் மொழிபெயர்ப்பு நூலைக்கொண்டு பிற மொழியாளர்கள் தத்தம் இலக்கியங்களிலுள்ள கருத்துக்களையும் இணைத்துத் தத்தம் மொழிகளில் திருக்குறள் விளக்க நூலை ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும். அவ் விளக்க நூலைப் படித்து அறிஞர்கள் தத்தம் மொழி பேசும் மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் சொற்பொழிவாற்றுதல் வேண்டும். அங்கங்கேயுள்ள பள்ளிப்பாட நூல்களில் திருக்குறளைப் பயன்படுத்துதல் வேண்டும். திருக்குறளைப் பற்றியே துணைப்பாட நூல்கள் சில எழுதப் பெறுதல் வேண்டும். ஆங்கிலத்திலே திருக்குறளைப் பற்றிச் சிறுசிறு கவர்ச்சிமிக்க நூல்களை வெளியிட்டு அவற்றைப் பிறமொழிகளில் மொழிபெயர்க்கும்படி ஏற்பாடு செய்தல்வேண்டும். தமிழ் மாநிலத்தின் வானொலியில் தமிழில் நாடொறும் காலையில் ‘குறளமுதம்’ ஒலிபரப்பப்படுதல் போலப் பிற நாடுகளிலும் அவ்வந்நாட்டு மொழிகளில் ‘குறளமுதம்’ ஒலிபரப்பப்படுதல் வேண்டும்.

இச்சீரிய செயல்களைத் தமிழகவரசு செய்வதற்கு நல்ல வாய்ப்பு அமைந்திருக்கிறது.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு 1968 தொடக்கத்தில் சென்னை மாநகரில் மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது. அம் மாநாட்டுக்கு வரவு வந்த தொகையில் செலவு போக மீந்ததில் தமிழ்நாட்டிலுள்ள சென்னை, அண்ணமலை, மதுரை ஆகிய மூன்று பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே மூன்று நூருயிர வெண் பொற்காசுகள் (ரூ. 3,00,000) திருக்குறள் ஆராய்ச்சித்துறை நிறுவும்பொருட்டு அப்போதைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணு அவர்கள் வழங்கியுள்ளனர்.

சென்னைப் பல்கலைக் கழகத்திலே திருக்குறளைப்பற்றி ஐந்து நூல்களும் அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலே இரண்டு நூல்களும் வெளிவந்திருக்கின்றன. மதுரைப் பல்கலைக் கழகத்திலிருந்து இரண்டு நூல்கள் வெளிவந்துள்ளன. திருக்குறளைப்

பற்றித் தமிழிலே மேலும் மேலும் நூல்களை வெளியிடுவதும் அருமையே யாகும்.

எனவே உலகெங்கணும் திருக்குறள் பரவும் வகையினை மூன்று பல்கலைக் கழகங்களும் கூடி ஆராய்ந்து இனிச் செய்ய வேண்டிய பணிகளைத் திட்டமிட்டுப் பகிர்ந்து கொண்டு பணி செயின் அது உலகெங்கும் பரவுதற்குச் செய்யுஞ் செய்தக்க சீரிய பணியாகும்.

ஆங்கிலத்திலே இனிமையாகவும் எளிமையாகவும் கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்ச் சொற்பொழிவாற்றுந் திறமை யுடையவர்கட்குத் திருக்குறளைப் பற்றிப் பயிற்சி கொடுத்து அவர்களை வெளி மாநிலங்கட்கும், வெளி நாடுகட்குமே அனுப்பித் திருக்குறளைப் பரப்பும்படி செய்தல் வேண்டும். பிறமாநில பிறநாட்டு அறிஞர்கள் சிலர்க்கு நம் பல்கலைக் கழகங்கள் பொருளுதவி செய்து திருக்குறளில் நன்கு பயிற்சி அளித்தல் வேண்டும்.

தமிழ் நாட்டிலே திருவள்ளுவர் தொண்டர் படை நிறுவித் திருக்குறள் வழி நடப்பதற்குப் பயிற்சி அளித்தல் வேண்டும். அங்ஙனம் பயிற்சி பெற்றவர்களைக் கிறித்தவ சமயத்தைப் பரப்புதற்குச் செய்துள்ள ஏற்பாட்டின்படி பிற மாநிலங்கட்கும் பிற நாடுகட்கும் அனுப்பி வைத்தல் வேண்டும். தொண்டர் படைக்குத் தனி அடையாளமும் தனியுடையும் அமைக்கப் பெறுதல் வேண்டும். இதுகாறும் திருக்குறள் மொழி பெயர்க்கப்படாமல் உள்ள பிற மாநில பிறநாட்டு மொழிகளில் மொழிபெயர்ப்பதற்குப் பொருளுதவி செய்தல் வேண்டும்.

இங்ஙனம் திருக்குறளை உலகெங்கும் பரப்புதற்குத் தமிழக அரசும், பல்கலைக் கழகங்களும், மடங்களும், செல்வர்களும் சேர்ந்து திட்டம் வகுத்து இத்தகைய சீரிய பணிகளும் தொண்டுகளும் செயல்பட ஆவன புரிவார்களாக!

'திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும்பணி' என்ற தலைப்புக் கட்டுரை இத்துடன் முடிவு பெறுகின்றதெனினும் 'அறிதொறும் அறிதொறும் அறியாமை கண்டற்றால்' என்ற திருவள்ளுவர் அருள்வாக்கிற் கிணங்க செய்யுந்தோறும் செய்யுந்தோறும் பணி முடியாமை காணப்பெறுவதால், கழகவழி ஒல்லும் வகையில் அப்பணி தொடர்ந்து நடைபெறும் என்ற நம்பிக்கை உள்ளத்திற்குவகை யூட்டுகின்றது.

—வ. சு.

முற்றும்

பராபரக் கண்ணி

ஓர் ஆய்வு

[நா. உசாதேவி எம்.ஏ.,

தமிழ்த் துறை, ம. தி. தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி-4.]

பத்திச் சுவையும், இலக்கியச் சுவையும் கலந்த ஒரு படைப்புத் தாயுமானவரின் பராபரக் கண்ணி. அளவொத்த சீர்களால் அமைந்து. இரண்டு அடிகளால் வருவது கண்ணி எனப்படும். இக் கண்ணி குறள்வெண் செந்துறை என்ற யாப்பமைதி பொருந்தியது. இவர் பாடிய கண்ணிகளின் மொத்த எண்ணிக்கை எண்ணூற்று அறுபத்தைந்து என்பதை, "எண்ணுறுங் கண்ணிகள் எண்ணூற்று அறுபத்தைந்து," என்பதால் உணரலாம். இக் கண்ணி, 'பராபரமே', என்று முடிவதால் பராபரக் கண்ணி எனப் பெயர் பெற்றது. மேலான வனும், கீழானவனும் சத்து, சித்து ஆகியவற்றில் நிறைந்திருப் பவனுமாகிய இறைவனைப், 'பராபரம்' என்றழைத்தார். கற்றூர்க்கும், கல்லார்க்குங் கழிபேருவகை அளிக்கும் வகையில், தாயுமானவர் கண்ணியைத் தேர்ந்தெடுத்தார். மக்கள் மொழி யில், எளிய நடையில், எடுப்பான மொழியில் பாடினர். 'பத்தி யின் மொழி தமிழாகும்,' என்ற தனி நாயக அடிகளின் கூற்றை இவர் கண்ணிகள் மெய்ப்பிக்கின்றன.

இப் பராபரக் கண்ணியை, 'மெய்யுணர்வுத் திருக்குறள்,' எனலாம். ஆன்ம உரையாடலையும், உருக்க மிகுதியையும் இக் கண்ணிகளில் காணலாம். இது திருவாசகம் தந்த கனிவாகும். இறைவன் அருளை நாடிச் சென்ற ஓர் உயிரின் நாட்குறிப் பாகவே இவருடைய கண்ணிகள் விளங்குகின்றன. அழுத்த மான, நுட்பமான, அனுபவத்தின் தெள்ளத் தெளிந்த சொல் வடிவங்களாகத் தாயுமானவர் கண்ணிகள் அமைந்து, ஊன் கலந்து, உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கும் தன்மையனவாக விளங்குகின்றன. இறைவனின் எல்லையற்ற அன்பும், அதை அடைய முடியாத உயிரின் துடிப்பும் மிக அழகாகப் பராபரக் கண்ணியில் விளக்கப்படுகின்றன. இறைவனை நோக்கிச் செல்லும் உயிரின் பயணத்தில் பல்வேறு படிகள் உள்ளன என்று நம்நாட்டுத் தத்துவ ஞானிகளும், வெலின் அண்டர் ஹில், அல்டாஸ் ஹக்ஸ்லி, போன்ற மேனுட்டு அறிஞர்களும் கருதுகின்றனர். அத்தகு நிலைகளில் விளங்கி, இறைவன் இயல்பையும், ஏங்கும் நெஞ்சத்தையும், அப்பும், உப்பும் போல்

கலந்த பாங்கையும், சீவகாருணியத்தையும், மலர்ந்த விரிந்த சமரசப் போக்கினையும் இப் பராபரக் கண்ணி தெளிவுறுத்து கின்றது.

தாயுமானவர் அடிச்சுவட்டின் வழிநின்று வள்ளலார் பாடுவதைக் காணலாம். பராபரக் கண்ணி எனக் கண்ணியாக இருந்ததே, மகாதேவமாலை என மாலையாக மலர்ந்தது எனலாம். சமயக் கருத்துகளை மக்களிடையே பரப்ப வேண்டு மெனப் பேச்சுத் தமிழைப் பயன்படுத்தினர். இறையனு பவத்தைச் - சொல்லில் அடங்கா இறைவனைச் சொல்லில் அடக்கப் பார்க்கின்றனர். இறைவனோடு நேர்முகமாக உரை யாடும் பாங்கினை இரு நூலிலும் காணலாம். பராபரம் - மகாதேவன் - இரண்டும் பொருள் ஒன்றே. மன்னுயிர்த் தொண்டு - எவ்வுயிர்க்கும் இரக்கம் காட்டும் தன்மையை - முடிவாக அடைகின்றனர். பிறவி நோயினின்றும் விடுதலை பெறுதலே', இருவருக்கும் நோக்கமாக அமைகிறது.

தாயுமானவர் இறைவனின் இயல்பை, ஒல்லும் வகை யெல்லாம், ஓயாது வெல்லும் வகையில், செல்லும் மொழியில் செப்பியுள்ளார்.

'அவனருளால் அவன்தாள் வணங்கி,' என்பதற் கிணங்க, உயிரானது உண்மையை உணரவேண்டுமாயின் திருவருளின் உதவி அதற்குத் தேவை என்கிறார்.

'பொய்யைப் பொய்யென் றறியும் போதத்துக் காதரவுன்
மெய்யருளே அன்றோ விளம்பாய் பராபரமே'

என்கிறார். 'வேதங் கிடந்து தடுமாறும் மெய்ப்பொருள்,' என்பார் பரஞ்சோதி. திருநாவுக்கரசரும், 'இப்படியன் இந் நிறத்தன், இவ்வண்ணத்தன், இவனிறைவன், என்றெழுதிக் காட்ட ஒண்ணாதே,' என்பார். இக் கருத்தையே தாயுமானவர்,

'ஆரறிவா ரென்ன அனந்த மறை ஓலமிடும்
பேரறிவே இன்பப் பெருக்கே'

என்பார்.

தமிழில் கடவுள் என்றால், எல்லாவற்றையும் கடந்து நிற்பவன் என்று பொருள்படும். அத்தகைய இறைவனைப் பட்டறிவின் வாயிலாகவே உணர முடியும்.

'ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே.'

'உரையுணர்வு இறந்து உணர்வதோர் உணர்வு' என்றெல்லாம் கூறுவார் மாணிக்கவாசகர். இவ் வுண்மையைக் கூறவந்த தாயுமானவர்,

'உரையிறந்த வன்பருளத் தோங்கொளியாய் ஓங்கிக்
கரையிறந்த இன்பக் கடலே பராபரமே'

என்கிருர்.

எல்லாமாக இருக்கும் இறைவனை,

'மாயை முதலாம் வினைநீ, மன்னுயிர்நீ மன்னுயிர் தேர்ந்து
ஆயும் அறிவானது நீயன்றோ பராபரமே.,

என்று பாடுகிருர். 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்ற கருத்தை,

'பார்க்கின் அண்டபிண்ட பரப்பனைத்தும் நின்செயலே
யார்க்கும் செயலிலையே ஐயா பராபரமே'

என்று கூறுகிருர். இறைவன் உருவாகவும், அருவாகவும் விளங்குகிற கருத்தை மாணிக்கவாசகர்,

'சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமாக் கடலே'

என்று புலப்படுத்துவார்.

'ஒன்றே பலவே உருவே அருவேயோ
என்றே அழைப்ப துன்னை யன்ருே பராபரமே'

என்கிருர்.

'யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்'

என்ற வள்ளுவர் கருத்தின் அடிப்படையில் தாயுமானவர்,

'சிந்தனைபோய் நானெனல் போய்த்தேக்க இன்ப மாமழை
வந்து பொழிந்தனைநீ வாழி பராபரமே'

என்கிருர்.

உட்பூசை செய்வதே இறைவனுக்கு உகந்தது என்கிருர்.

'நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சனநீர் பூசை கொள்ள வாராய் பராபரமே'

என்றழைக்கிருர்.

'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானுர்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே'

என்று திருமூலர் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது. 'மகிழ்ந்து செய்யும் சேவையே எல்லா இன்பத்திலும் சிறந்தது,' என்பார் காந்தியடிகள். அன்பர் பணி செய்வதே அடிகள் விரும்புவது. எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அடிகள் கொள்கை. சும்மா இருக்கும் சுகத்தைப் பெரிதும் விரும்புகிருர். கொல்லா விரதம் குவலயமெல்லாம் பரவ வேண்டுமென விழைகிருர். மார்க்கண்டேயனையும், மாணிக்க வாசகரையும் தம் பாடல்களில் நினைவுகூர்கிருர். அப்பும் உப்பும் கலந்தாற்போல், இறைவனேடு ஐக்கியமுற்ற இன்பநிலை அளவிடற்கரியது என்கிருர். உயிர்கட்கு இரக்கமுடைய அன்பருக்குத் தான் அடிமையாக ஏவல் செய்வேன் என்கிருர்.

இவ்வாறு பத்திச் சுவையே மேலோங்கி நிற்கும் பராபரக் கண்ணி, இலக்கியச் சுவையிலும் விஞ்சி நிற்கிறது. உவமையைக் கையாள்வதன்மூலம் ஒரு கவிஞனின் ஆற்றலை உணர முடியும்.

'கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போல,'

'வித்தின்றி யாதும் விளைவதுண்டோ ?'

'கேட்டதையே சொல்லுங் கிளிபோல்',

'நீர்க்குமிழி போல,'

'ஆடியோய் பம்பரம் போல்,'

'கல்லெறிய பாசி கலைந்து நன்னீர் காணு நல்லோர்
சொல்லுணரின் ஞானம் வந்து தோன்றும் பராபரமே'

போன்ற உவமைகளை எடுத்தாள்கிருர். நகைச்சுவையோடு பாடுவதிலும் வல்லவராகத் திகழ்கிருர் அடிகள்.

'வான்காண வேண்டின் மலையேறல் ஒக்குமுன்னை
நான்காணப் பாவனைசெய் நாட்டம் பராபரமே' —100

'கொள்ளித் தேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்க்
கள்ளமனந் துள்ளுவதென் கண்டாய் பராபரமே' —171

'நூலேணி விண்ணேற நூற்குப் பருத்தி வைப்பார்
போலே கருவி நன்னூற் போதம் பராபரமே' —186

இவைபோன்ற இடங்களில் நகைச்சுவை உணர்வு தோன்றப் பாடியுள்ளார். 'இசையுடன் நினைப்பதே கவிதை' என்பார் கார்லைல். பராபரக் கண்ணிப் பாடல்கள் முழுதும் இசை நயத்தையும், ஓசையின்பத்தையும் காணலாம்.

'ஐயோ வுனைக் காண்பான் ஆசைகொண்ட தத்தனையும்
பொய்யோ வெளியாப் புகலாய் பராபரமே' —37

என்று பாடும்போது, 'ஐயோ' என்ற இரங்கல் ஒலிக்குறிப்புச் சொல், அடிகளாரின் ஏங்கும் அருள் நெஞ்சம் முழுவதையும் தாங்கி நிற்பதைப் பார்க்கலாம்.

சிறுசிறு பாடல்கள் வழி, தாயுமானவர் தம் இறையன்பை யும், ஏங்கும் நெஞ்சத்தையும், புலப்படுத்துகிருர். பத்திமத சித்தாந்தத்தையும், வேதாந்தத்தையும், சித்த வழியையும் இசைவித்து, எல்லாவற்றுக்கும் மேலாக ஆன்மநேய ஒருமைப் பாடு பற்றிப் பாடுகிருர். தாயுமானவரை எந்தச் சமயக் கூட்டிலும் சிறைப்படுத்த முடியாது. பராபரக் கண்ணி கற்ருர்க்கும், கல்லார்க்கும் களிப்பருளும் கவித்தேன் - பத்தித் தேன் என்றே கூறலாம்.

———

சீவன் முத்தி

முடிந்த பயனாக உடற்சித்தியை அடிகள் வேண்டிற்றிலர் என்பது,

"கற்ருலுங் கேட்டாலுங் காயமழியாத சித்தி
பெற்ருலும் இன்பமுண்டோ பேசாய் பராபரமே"
(பராபரக்கண்ணி உஅரு)

என்றமையால் இனிது விளங்கும். உடலுள்ள போதே சீவன் முத்தி யடையாமல், உடல் நீத்தபின் உயிர் முத்தியிற் சேர்தலென்பது பொருந்தா தென்பார்,

"உலகநெறி போற்சடலம் ஓய உயிர்முத்தி
இலகும் எனல்பந்த இயல்போ பராபரமே"
(பராபரக்கண்ணி கூருஅ)

என்ருர்.

பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை
(தாயுமான சுவாமிகள் வரலாறும் நூலாராய்ச்சியும், பக். ௧௬௧)

இசைத்துறையில் அடிமைநிலை

[திரு. வீ. ப. கா. சொல்லழகன், மு. க.]

இன்று, தமிழ்த்திரு கீ. இராமலிங்கரின் முயற்சியாலும், கழகத்தின் பல்வகைப் பணிகளாலும், சென்னை அண்ணமலைப் பல்கலைக் கழகங்களின் திட்டச் செயல்களாலும் ஞா. தேவநேய ரின் ஆழ்ந்த ஆய்வுரைகளாலும் தமிழ்த்துறைச் சொல்கள் வளர்ந்து வளம்பெற்றுள்ளன. அறிவியல், ஆட்சியியல், நில வியல் முதலிய இயல்களில் துறைச் சொல் அகராதிகள் தோன்றி வளர்ந்து ஆங்கு ஆங்கு நன்கு பயன்படுகின்றன. அண்ணமலைப் பல்கலைக் கழகம் - தெலுங்குக் கீர்த்தனைகளுக்கு இணையான, இசை இலக்கண நயம் நிறைந்த தமிழ்க் கீர்த்தனை களைத் தந்தது. அது வாழிய. புரவலர் ராசா சர் அண்ணமலை யார்க்குத் தமிழ்நாடு பெரிதும் என்றும் கடமைப்பட்டுளது.

ஆனல் இன்று - தமிழிசை உலகில் - பயன்படும் சொற்கள் சமற்கிருதச் சொற்களே. இசைக் கல்லூரிப் பாடத் திட்டங் களில் இன்றுவரை உள்ள சொற்கள் நூற்றுக்கு 90 வட சொற்களே. மாணவர்கள் தமிழ்ச்சொற்கு ஆசைப்படினும், இசைக் கல்லூரி ஆசிரியர்கள் சமற்கிருதச் சொற்களைத் - தாங்கள் கற்றுக் கொண்ட காரணத்தாலும், சமற்கிருதச் சொற் களுக்கு உரிய நேரிய தமிழ்ச் சொற்கள் தெரியாமையாலும், அறியா வீண் விடாப்பிடியாலும் இசை வகுப்புகளிலும் வெளி யுலகிலும் சமற்கிருத இசைச் சொற்களையே பெரிதும் வழங்கு கின்றனர்.

இசைத்தமிழ் - வடசொல் சிறையினின்றும் இன்னும் விடுதலை பெறவில்லை - ஓரினத்தவர் - குருட்டாட்ட விடாப்பிடி யினுல், தளையிட்டு வைத்துள்ள இசையன்னை விடுதலைபெறும் காலம் மிக நெருங்கி வந்துவிட்டது. திடமிக்க - சூழ்ச்சிமிக்க - வடசொல் விலங்குகளை உடைத்தெறிந்து தமிழிசை அன்னையை விடுதலை செய்யத் தமிழ்ப் பற்றினரே உறுதி பூணுங்கள். இன்னும் தூங்குதல் வேண்டா.

துருப்பிடித்து, புதைபட்டுக் கிடக்கும் இனிய செந்தமிழ்ச் சொற்களைத் தேடி எடுப்போம். அறியாமைத்துரு, அற விளக்கு வோம்; நெறியாக வழங்குவோம். சைவசித்தாந்தக் கழகம் அறிவுத் துறையில் ஆக்கம் தருகிறது; ஊக்கம் ஊட்டுகின்றது. தமிழ்க் கூடல் இலக்கியப் பரப்பிலே - பாட்டிலும் தொகையிலும் காட்டிய இசைச் சொற்களை ஈட்டிப் பயன்படுத்துவோம்.

பண்களின் (இராகங்களின்) பெயர்கள் எல்லாம் வட சொற்கள் :—கல்யாணி, ஹம்ஸத்வனி, பேகடா, லலித, தன்யாசி, மார்க்க ஹிந்தோளம், ஜுஜாஹுளி, ஆந்தோளிகா, நாராயணகொளி, ருத்ரப் பிரியா, காபி, நாராயணி, பிரதாப வராளி, சுத்த ஜஞ்ஜுடி, ஜிங்காளா, பூர்வி, பூஷாவளி, லதாங்கி, சூலினி, ஹனுமத் தோடி, குர்ஜரி, பிந்ந ஷட்ஜம், கம்டா, ஸுரடி, மாளவ ஸ்ரீ இன்னும் எத்தனையோ வேடிக்கை வேடிக்கையான பெயர்கள். இப் பெயர்களின் பொருள் என்ன? இப் பெயர்களுக்கும் பண்ணமைப்புக்கும் (இராகச் சுரங்களுக்கும்) ஏதாவது தொடர்புண்டா? பண்டை யிலக்கியங்களுக்கும் இப் பெயர்களுக்கும் தொடர்பு உண்டா? ஜுஜாஹுளி - ஜிங்களா என்பனவற்றை நீ, குருட்டாட்டமாய் விடாப்பிடியாய் - முரட்டுத் தருக்கமிட்டுச் சிக்கெனப் பிடித்துக் கொண்டிருக்கும் பத்திமை (பக்தி)க் கோட்பாட்டின் பயன் என்ன? பண்பு என்ன?

இனித் தாள நுணுக்கச் சொற்களைக் காண்போம். 'திஸ்ரம்,' 'மிஸ்ரம்', 'சதுஸ்ரம்' - என்னையா - இத்தனை இஸ்ரங்கள்? யாருக்குப் பொருள் விளங்கும். 'கண்டம்' — 'சங்கீரணம்' - யாருக்குத் தேவை?

ஒரு நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது. ஒரு மகனின் பிறப்பு மங்கலநாள். அவனே ஒரே பிள்ளை; மிகச் செல்லப் பிள்ளை; மிகச் செல்வப் பிள்ளை. அவன்பேர் செல்லப்பா. அவனுக்கு மத்தளம் கற்பிக்க, மத்தள ஆசான் காலையில் 7 மணிக்கே வீட்டுக்கு வந்தான். செல்லப்பாவைப் பார்த்து ''இன்று 'கண்டம்' தொடங்குவோம்'' என்றான் ஆசான். இதைக் கேட்டிருந்த செல்லப்பாவின் பாட்டி வெகுண்டெழுந்தாள் - கூறினாள் - ''அட, பாவி! என் செல்லப் பேரனின் பிறப்புநாள் சிறப்புநாள் - விடியற்காலையில் கண்டம் தொடங்குவோம் என்றாயே? எமகண்டம் உனக்குத் தொடங்கட்டும். செல்லப்பா! இந்த மத்தளத்தைக் கண்டம் கண்டமாய் நறுக்கி எறி - இல்லாவிட்டால் - இந்த ஒற்றை ஆள் சொன்ன சொல் உன்னை என்றும் தொடரும்'' என்று வருந்திப் புலம்பினாள். கண்டம் எனும் சொல்லுக்கு 'ஐந்து - ஐம்மை - ஐந்தமைப்பு' என்று கூறினால் தவறு என்ன? பொருந்தாதோ? புரியாதோ? கண்டத்தைப் பிடித்துக்கொண்டு எக்கண்டம் செய்வது? கண்டித்தற்கும் – ஏன், தண்டித்தற்கும் உரியது. சிலர் அடித்தால்தான் திருந்துவர். ஆகையால் பெரியார் ''தொட்டால் தீட்டு என்று தன்னை உயர்த்துவோன் ஒருவன் கூறினால்-அவனை முதுகில் தீட்டு'' என்றார். ஆங்காங்கு 30 ஆண்டுகட்கு முன்

முதுகில் தீட்டப் பெற்றூர்கள் சிலர். அதன்பயனுகத் தீட்டு இன்று விட்டு ஓடியது.

திஸ்ரம் = மும்மை; சதுஸ்ரம் = நான்மை; கண்டம் = ஐம்மை; மிஸ்ரம் = எழுமை; சங்கீரணம் = ஒன்பான்மை. $\frac{3}{4}$, $1\frac{1}{2}$, 3, 6, 9 இவை யாவும் மும்மைப் பகுப்புகள். இதுபோன்றே $\frac{1}{2}$, 1, 2, 4, 8 நான்மையின் பகுப்புகள். தமிழிலே எளிமையாக இனிமையாக மட்டுமன்றிப் பொருள்புரியக் கூறலாம்.

இசையறிஞர் பலர் - தம்மைப் 'பாகவெதர்' என்றும் 'பாகவதர்' என்றும் சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகின்றனர். இந்தப் ''பாகவெதர்'' என்ற சொல்லை நினைத்து நினைத்து நான் தனியாகச் சிரித்துக் கொள்வதுண்டு. இசைத் தொழில் புரிந்து வாழ்க்கை நடத்துபவர் இசைவாணர். ''இசை வள்ளுநர்'' எனும் சொல் மருவி 'இசைவாணர்' ஆகும். இசையை வள்ளுநர் - இசையை வழங்குபவர். பாக்களை வள்ளுநர் = பாக்களை வழங்குபவர் பாவாணர். சிலர் பாக்களால் வாழுநர் - பாவாணர் என்பர். மேலும் இதுபற்றிய ஆய்வுரை கூறுவோம்.

அடுத்த மலரில் இசைச் சொற்கள் பற்றி மேலும் கூறப் படும். படிப்பவர்கள் தம் கருத்துகளை - ஆவல்களைத் தாமரைச் செல்வர் கழக ஆட்சியாளர் வ. சுப்பையா அவர்களுக்குத் தெரிவித்துதவுக.

இசையின் ஆற்றல்

மேதக்க எண்ணங்களை உள்ளத்தெழுப்ப, கடுஞ்சினங் கனிந்தெழும்படி தூண்ட, அன்பைப் பெருக்க, மனிதரை இயக்கி ஆட்கொள்ளச் செய்ய எதற்கும் இசையினும் அருந் திறல் வாய்ந்த மறைகலை இல்லை.

—அடிசன்

ஆப்பிரிக்கச் சுற்றுலா

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

(முன் இதழ் உஉரு ஆம் பக்கத் தொடர்ச்சி)

10. தமிழர் மரபு வாழ்க!

டர்பானில் தனித்தமிழ் ஆர்வமும், சைவப்பற்றும் தழைத் தோங்குகின்றன. எத்தனை எத்தனை கழகங்கள்! சைவ சித்தாந்தக் கழகம், அருட்பாக் கழகம், திருக்குறட் கழகம், தமிழிசைக் கழகம், வைதிகசைவக் கழகம், தமிழ்மறைக் கழகம், தெய்வநெறிக் கழகம், ஆரியசமாசம், இராமகிருட்டிண சங்கம், குசராத்திச் சங்கம் – எல்லாச் சங்கங்களும் கழகங்களும் என்னை வரவேற்று உரைநலங் கேட்டன. விளம்பரங்கள் பறந்தன. இசைக்கருவிகள் இனிது அமைந்தன. படக்கருவிகளும் பதிவுக் கருவிகளும் தொடர்ந்தன. மனமூன்றிக் கேட்கும் மக்களுக்குப் பேசுவது மகிழ்ச்சியின் மகிழ்ச்சியே! சைவநெறிப் பயிற்சிக் கூட்டம், சரியை, கிரியை, யோக, ஞான சாதனக் கூட்டம் பயன்பெற நடந்தன. சிவத்தொண்டரை முறையாகப் பயிற்ற இங்கே யோக சமாசத்தில் மன்றம் காணவும் அன்பர் முன் வந்துள்ளனர். திருக்குறள், திருவாசகம், திருமந்திரம், திருத் தொண்டர் வரலாறுகளை விளக்கும்போது அன்பர் ஆர்வம் கரைபுரண்டோடும். ஆங்கிலப்பண்பாட்டிலே வளர்ந்த ஆப்பிரிக்க தமிழர் தமிழை நன்ருகக் கற்றுக்கொள்ள Learn Tamil (கற்க தமிழை) என்ற ஐந்து பயிற்சி நூல்களை யாத்துக் கொண்டிருக் கிறேன். (1) எழுத்து, சொல் (2) உரையாடல் (3) கதைகள் வழியே இலக்கணம் (4) உலகப் பெரியார் வரலாறு (5) விஞ் ஞானம். இவ்வாறு ஐந்து நூல்களை எழுதி வெளியிட அன்பர் பணித்தனர்; பணி பயன் பழுக்கிறது. ஒரு நாள் தேவாரப் பாடல்களே பாடிச்சிவனடியார் செய்த வியன்களை விளக்கினேன். இயற்கை யறிஞர் அணு சத்தியைக் கண்டதுபோல இறை யறிஞர் அருட்சத்தியைக் கண்டனர். அருட்சத்தியால் சீவனை இயக்கும் சிவசத்தியைப் பெறுதலே சித்தாந்த யோக சாதனமாகும். இதன் பயிற்சிகள் திருமந்திரத்திலே பொதிந்து கிடக்கின்றன.

கற்பனகற்றுக் கலைமன்னு மெய்யோகம்
முற்பத ஞான முறைமுறை நண்ணியே
சொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே.

வேதாந்தம், நாதாந்தம், பூதாந்தம், போதாந்தம், கலாந்தம், எல்லாம் கடந்த சித்தாந்த முடிபே, சீவனும் சிவனும் இரண்டறக் கலக்கும். இன்பத்தைத் தர வல்லது என்று விளக்கிச் சாதன முறையும் காட்டினேன். எல்லாம் ஆங்கிலத்திலே தான். எனது Revelations of Meikandar (மெய்கண்ட விளக்கம்) என்ற நூலைச் சொக்கழகாக லித்தோவில் அச்சிட்டு அனைவரும் ஓதினர். வெள்ளையர் கூடச் சைவ சித்தாந்தம் கற்க முன்வந்தனர்.

தமிழ்க் குழுவம் (Tamil Federation) மாபெருங் கூட்டம் கூட்டியது. அதில் தமிழ் மந்திரம் கண்ட யோக நெறியை விளக்கி இசை விருந்தளித்தேன். ஒரு தமிழறிஞர் எழுந்து "இப்போதே பாட வேண்டும் டர்பான் தமிழருக்குப் பாராட்டு வாழ்த்து" என்றொரு சீட்டனுப்பினர். பாடினேன்; அனைவரும் இணைந்து பாடினர்—பெண்கள் ஒரு வரி ஆண்கள் ஒரு வரி. பெண்குரலே வென்றது.

தாளாண்மை மிக்க தமிழர் மரபென்றும்
வேளாண்மை செய்து விளங்குகவே—ஆளாண்மை
கொண்டநலத் தொண்டினிலே கொள்கை நிறைவேறக்
கண்டின்ப வெற்றிக் கனி.

(பாகேஸ்ரீ - ஆதிதாளம்)

வாழிய வாழியவே—நீடு—வளம்பெற வாழியவே
ஆழியும் வானும்போல்—அன்புத் தமிழர் மரபு (வாழிய)

திமிதமிட்டுக் குதிக்கும்—குமுதக் கடலோரம்
அமிழ்தம் பொழியும் டர்பான்—ஆர்வத் தமிழர் நலம் (வாழிய)

தென்னுப்பிரிக் காவைத் தேன்பொழியச் செய்து
பொன்னுடெனப் புரிந்த புலமைத் தமிழர் குலம் (வாழிய)

கட்டித்தங்கம் பொலியக் கரும்புத்தோட்டம் செழிக்க
நெற்றிவேர்வையைக் கொட்டி நிதமும் பாடுபட்டார் (வாழிய)

தங்கமணிச் சுரங்கம் இங்கு தழைப்பதெல்லாம்
சிங்கமணித் தமிழர் சிந்திய வேர்வையினுல் (வாழிய)

இரவுபகலாக இரத்தப் பாடுபட்டார்
கரவிலாத் தமிழரின் கைகளைக் கொஞ்சுவோம் (வாழிய)

எத்தனை இன்னல்கள் எத்தனை இழிவுகள்!
அத்தனையும் பொறுத்தார் ஆயுளெல்லாம் உழைத்தார் (வாழிய,

காந்தியின் சத்தியக் கடமைக்குக் கைகொடுத்தே
சாந்தக்கலை வளர்த்தார்—தாயின் விடுதலைக்கே (வாழிய)

முப்பாலுண்ட தமிழர் முப்பொருள் அறிவினர்
இப்பால் உலகினில் இன்புறப் பண்புற　　(வாழிய)

உரிமையுடன் அருட் பெருமையுடன் எங்கள்
அருமைத் தமிழர்குலம் ஒருமையுடன் என்றும்　　(வாழிய)

கார்எனச் சிவனருள் கருணைமழை பொழியப்
பாரில் வளம்பெருகிப் பல்லாண்டு பல்லாண்டு　　(வாழிய)

இப் பாட்டு முழங்கியதும் குயில் மாணிக்கம் குழுவினர் என் பாடல்களை இன்னிசைக் கருவிகளுடன் பாடினர். செயலட்சுமி யின் நாட்டியம் நடந்தது. செவிக்கும், விருந்து நடந்த பிறகு நாவுக்கு நல்விருந்து நடந்தது.

11. அருட்பாக் கழகம்

என் உள்ளத்தைக் கவர்ந்தது அருட்பாக் கழகம். அதில் கண்டறியாதன கண்டேன். தங்கமேயனைய தமிழரைக் கண் டேன். வள்ளலாருக்கு உள்ளாரப் பணி செய்யும் உத்தமரைக் கண்டேன். நான் சிறு வயது முதல் அருட்பாவில் அன்பு வைத்தேன். என் தமிழாசிரியர் தெய்வசிகாமணி யோகியார் வள்ளலாருடன் இருந்து அவரது ஆசியைப் பெற்றவர். அவரே எனக்கு இராமலிங்க சோதியை விளக்கினர். நான் ஆங்கிலத்திலும் இந்தியிலும் தமிழிலும் வள்ளலார் உள் ளத்தைவளம்பெற விளக்கியுள்ளேன். தவத்திரு அரவிந்தருக்கு நான் வள்ளலார் பற்றியும் சமரசசுத்த சன்மார்க்க நிலையம் பற்றியும் விரிவாக விளக்கினேன். அரவிந்தாசிரமத்தை விட்டு வந்ததும், உலகத்தைச் சுற்றி வந்து, வடலூரில் ஒரு பெரிய அருட்பணிக்கு அடிகோலினேன். வள்ளலார் சபை யும் சாலையும் அமைத்து மேட்டுக்குப்பம் சித்திவளாகத்தில் நான்கு ஆண்டுகள் இருந்து (1870-74) மறைந்தார். அவர் தொடங்கிய பணிகள் இன்னும் நிறைவாக வில்லை. வடலூரில் மூன்றுண்டுகள் (1867-70) சத்தியஞான சபை எழுப்பிச் சீவ காருணியப் பணியை உணவுச் சாலையிலே தொடங்கி வைத்தார். இன்னும் அவர் மருத்துவ நிலையம், சுத்த சன்மார்க்கப் பாட சாலை, சாத்திரச்சாலை, உபகாரச்சாலை, விருத்திசாலை, உபாச னுசாலை, யோகசாலை, விவகாரச்சாலை, சன்மார்க்கக்கலா சாலைகள் காணத் திட்டமிட்டிருந்தார். தாது வருடப் பஞ்சத் தில் வருந்திய நம் மக்களுக்குச் சாது வள்ளலாரின் உள்ளம் புலனுக வில்லை. என் ஆசிரியர் தெய்வசிகாமணி யோகியார் வள்ளலார் உள்ளத்தை அறிந்துணர்ந்தவர். அவர் என்னிடம் பல அரிய அருளார்வங்களைக் கூறினர். அவற்றைச் செய

லாக்கவே முப்பதாண்டுகள் மோனத்தவம் புரிந்து பாரதசக்தி மகா காவியத்தில் அருட்சமயோக ஆக்கத்தைப் பாடி முடித்துப் பணி நலம் புரிய வந்தேன். என் நண்பர் ஓ. பி. ராமசாமி ரெட்டியார் என்னைத் தலைவனுக்கி வள்ளலார் குருகுலம் மெள்ள மெள்ள எழுப்பினர். ஆனல், என் ஆர்வங்களை அவர் அறிய வில்லை.

உலகைச் சுற்றிப் பல நாடுகளைக் கண்டு யோக விஞ்ஞான மும், கிழக்கு மேற்குக் கலைவளமும், சாதிசமய பேதமில்லாத சமயோகமும்கூடிய ஒரு பெரிய ஆக்கவேலைக்காக நான் ஊக்க முடன் எழுந்தேன். எனக்கு உறுதுணையாக சுசர்லாந்து, ஜெர்மனி, அமெரிக்கா நண்பர் பலர் கைகொடுப்பதாகவும் முன் வந்தனர். என் ஆர்வம் அவலமானது. வடலூர் வடதிசை யில் வள்ளலார் குறிப்பின்படியே யோக நிலையம் கண்டு, திருமந்திர யோகத்தை ஆய்ந்து சிலருக்குப் பயிற்றி வந்தேன். அத்துடன் பாரத சத்தி பாடமும் நடந்தது. பத்துக் குடும்பங் களை சமயோக சன்மார்க்கத்திற் பயிற்றினேன். இதற்குள் எனக்கு நேர்ந்த இடர்களும் இன்னல்களும் சொல்லொணுதவை. நேற்று இன்னல் செய்தவர்கள் இன்று இல்லை. திருவருள் இருக்கிறது, சிறக்கிறது. தீடீரென்று எனது தியான அறையுள் பாம்பு படமெடுக்கும். காலைச் சுற்றும்; கட்டிலில் பாம்பு சுருண்டு கிடக்கும். நண்டுவாக்காளி கொட்டும். என் அரிய நூல்களைக் கிழித்து சமாசத்தில் உள்ள முந்திரித் தோப்பில் எறிந்திருப்பார்கள். திடீரென்று வேலி காலியாகும். வாசல் கதவு களவு போகும்; பாதையில் முள் நிரம்பிக் குவிந் திருக்கும்; மிரட்டுக் கடிதங்கள் வரும்; பொருள் கொள்ளை போகும்; கையெழுத்துப் பிரதிகள் களவு போகும். நான் பருகும் பாலில் நீலம் காணும்; வசைகள் கேட்கும்; தலைவருக்கு நல்ல மரியாதை; ஆதலால் நான் வாங்கிய 18 ஏக்கர் நிலத்தில் 10 ஏக்கர் பூதானத்திற்குத் தந்துவிட்டு, மீதியை பாலு என்ற உத்தமர் வசம் ஒப்பித்துவிட்டு, அங்கே நல்ல பணிகள் யாரும் செய்யலாம் என்று விட்டுவிட்டு உலகைச் சுற்றி வந்தேன். சென்னையில் அமைதியான இடத்தில் யோகசமாசமும், ஓங்கார மண்டபமும் அமைத்து மௌனத்திற்கே திரும்பினேன். மகாதுரிய சமாதிகூடி அதில் எழும் அருள் பாடல்களை எழுதி வைத்து அமைதியாக உள்ளேன். ஆண்டவன் எனக்குப் பணித்த பணிகள் நிறைவேறுகின்றன. வடலூரில் பத்து ஏக்கரா நிலத்தில் ஒரு பெரிய மூலிகைத் தோட்டமும் சித்த வைத்தியசாலையும் நிறுவ ஆர்வங் கொண்டேன். ஆர்வத் தீயைப் பொருமைப் புயல் அணைத்துவிட்டது.

'உனக்கேன் இந்த வேலை, உன் உள்ளத்தான் ஏவும் பணியை உள்ளடக்கத்துடன் செய்து மௌனமாயிருந்துபோ' என்று இறைவன் பணித்தான். என் காலத்திற்குப் பிறகு எழுத்து மூட்டைகளை உள்ளன்பர் அலசிப் பார்த்தால், என் கருத்து வெளிப்படும். கடவுள் அருள் பெற்ற பன்மொழிப் புலவர் வாய்த்தால் அது நிறைவேறும். காலச் சூறுவளியுடன் போராட எனக்கு நேரமில்லை. ஆதலால் பயனுள்ள ஆக்க வேலைகளை முடித்து மனித மரபுக்கு 1500 நூல்கள் அளித்துச் செல்லுகிறேன். கடவுளையே நம்பி என் எழுதுகோல் உழுது கொண்டிருக்கிறது. உழவின் விளைவு உலகுக்கே. இப்போது வள்ளல் மகாலிங்கம் வடலூரிற் செய்துவரும் அருட்பணிகள் வள்ளலார் கருணையால் நடப்பன. வள்ளற் பெருமானே அவரை அனுப்பியுள்ளார். ஆன்மநேய உரிமை என்னும் சமயோகமே வள்ளல் உள்ளம்; என் உள்ளமும் அதுவே. அதை நிறைவேற்றிக் கண்டால் என் ஆயுட்பணி நிறை வேறியதாக உணர்வேன். யார் நலம் புரிந்தாலும் யார் நலம் பெற்றாலும் இன்புறுவோம்.

அதற்கேற்ற தங்கமேயனைய அன்பரை டர்பானிற் கண்டேன். S. V. ஐயர், நாகவல்லி, யோகவல்லி ஆகியோர் அருட்பாக் கழகம் நாட்டி இங்கே அற்புதப் பணி பரவுகின்றனர். சுமார் மூவாயிரம் பேர் அமர்ந்து கேட்கும் அழகிய மன்றம் அமைத்துச் சொல்லரங்கமும் எழுப்பியுள்ளனர். பிங்கோவில் கோவிலமைத்து வள்ளற் பெருமான் அருட்பாவை முழக்கு கின்றனர். முறையாக சித்தாந்த சமயத்தையும் திருமுறை நூல்களையும், அருட்பாவையும் இசையணிகளுடன் மாணவ மாணவிகளுக்குக் கற்பிக்கின்றனர். இப்போது மற்றொரு பெரிய அருட்கோயில் எழுப்பித் திறப்பு விழாவுக்கு என்னை அழைத் துள்ளனர். அருட்பாவை நாட்டியக் கலையுடன் பரப்பும் கவின் பணி மிகவும் போற்றத்தக்கது. இக் கழகம் என் (St. Ramalinga and His Revelations) என்ற நூலை ஏராளமாக அச்சிட்டுத் தாராளமாக நாடெங்கும் வழங்கியது. என் சோதி ராமலிங்கத்தை அரங்கேற்றியது.

அருட்பாக் கழகம் மாபெரும் கூட்டம்கூட்டி எனக்குச் சிறப்பான வரவேற்பளித்தது. "அருட்பா செய்த அற்புதம்" என்பது பற்றி இரண்டு மணி நேரம் இசைக் கருவிகளுடன் சொற்பொழிவாற்றினேன். அலங்கார மேடையில் வள்ளலார் திருவுருவம் அழகாகப் பொலிந்தது. அருட்பாவுடன் தேவார திருவாசகங்களும் முழங்கின. சிறுவரும் சிறுமியரும் இரண்டு அணிகளாகச் சூழ்ந்தனர். "மாற்றறியாத செழும் பசும்

பொன்னே'' என்ற அருட்பாவை சுரடி ராகத்திற் பாடிக் கொண்டே மலர் தூவி நடனமாடினர். பிறகு குமரிப் பெண்கள் அழகான ஆடையணிந்து கையில் விளக்கேந்தி ''அருள் விளக்கே அருட்சுடரே, அருட்சோதி சிவமே'' என்ற அருட்பாவுக்கு அபிநயம் பிடித்து அழகாக ஆடினர். ''துரியமலே மேலுளதோர் சோதி வள நாடு'' என்ற பாட்டுக்கு ஏற்றபடி சுடரை உயர்த்தி இன்பஞ் சிலிர்க்க அவர்கள் செய்த ஒளி நடனம் இன்றும் என் முன் ஆடுகிறது. இவ்வாறு அருட்பாவைக் கும்மி, கோலாட்டம், பாட்டு, நடனங்களில் அமைத்து, ஆங்கிலத்திலும் உலகோருக்கு விளக்கி அருட்பாக் கழகம் செய்துவரும் பணிநலம் வியக்கத்தக்கது.

''சாதியிலே மதங்களிலே'' என்ற பாட்டுக்குப் பிடித்த கூத்தழகு, அழகு அழகு! ''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்'' என்ற பாட்டை உருக்கமாகப் பாடி ஆடினர் அருட்பாத் தொண்டர். ''சோதி ராமலிங்கம்'' என்ற என் நாடகத்தை அவர்கள் அற்புதமாக நடித்தனர். தைப்பூசத் திருநாளில், ஒருநாள் முழுதும் நான் அருட்பா விளக்கம் செய்தேன். பெருந்திரளான அன்பர் மிக அமைதியாகக் கேட்டனர். இடையிடையே என்கூடப் பாடினர். திருவாசகத்திற்கு ''இன்றெனக்கருளி இருள் கடிந்து'' என்ற பாட்டு உள்ளமாயிருப்பதுபோல, வள்ளலார் உள்ளம் உணர்வு, அனைத்தும் அடியில் வரும் பாட்டில் ஒளிரும். இப் பாட்டை ஒருமணி நேரம் ஒருநாள் விளக்கினேன் :

''கடல் கடந்தேன்; கரை கடந்தேன்
கண்டு கொண்டேன் கோவில்;
கதவுதிறந் திடப் பெற்றேன்
காட்சி யெல்லாங் கண்டேன்;
அடர்கடந்த திரு அமுதுண்டு,
அருளாலே அனைத்தும்
அறிந்துதெளிந் திடப்பெற்றேன்
அழியாமை யடைந்தேன்.

உடல் குளிர்ந்தேன்; உயிர் கிளர்ந்தேன்
உள்ளமெல்லாம் தழைத்தேன்
உள்ளபொருள் உள்ளபடி
உள்ளவனைப் பிறைந்தேன்
இடர்தவிர்க்கும் சித்தியெல்லாம்
என்வசமா யினவே;
இத்தனையும் பொது நடஞ்செய்
இறைவனருட் செயலே,

வள்ளலார் பாட்டாலும் பணிவாலும் பெற்ற அருட்சித்தியால் என்ன உலகத்தொண்டு செய்ய நினைத்தார், மக்கள் இடர்களைத் தவிர்க்க என்ன ஆக்க வேலைகளைத் தொடர்ந்தார் என்பதைச் சில பாடல்களால் விளக்கியுள்ளார். "ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்; எப்பாரும் எவ்வுலகும் சென்று எந்தை சிவன் புகழை இயம்பியிடல் வேண்டும்; உயிர்களுக்குற்ற அச்சம் பிணி துயர்களைத் தவிர்க்க வேண்டும்" என முன்வந்தார்.

எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் எனவே
எண்ணிநல் இன்புறச் செயவும்
அவ்வுயிர்களுக்கு வரும் இடையூற்றை
அகற்றியே அச்ச நீக்கிடவும்,
செவ்வை யுற்றுனது திருப்பதம் பாடிச்
சிவசிவ என்றுகூத் தாடி
ஒவ்வுறு களிப்பால் அழிவுறு திங்கே
ஓங்கவும் இச்சைகாண் எந்தாய்?

அறிவும் பரிவும், அன்பும் அருளும், இரக்கமும் இளக்கமும் கொண்ட வள்ளல் உள்ளம் கருணைவெள்ளம்? சாதி யுகத்தை ஒழித்துச் சோதி யுகத்தைத் துலக்கிய சுத்தசன்மார்க்க சித்தருக்காக வடலூரில் இப்போது நல்ல பணிகள் நடைபெறுகின்றன. ஆனால், இக் காலத்தில் கண்ணைத் துடைக்கும் அரைகுறை அவலப்படிப்பையே பிடிப்பாகக் கொண்ட கல்விமுறை போதாது. நான் உலக நாடுகளில் ஓங்கும் அரிய கல்வி நிலையங்களைக் கண்டு "கல்விக்கதிர்" என்ற என் நூலில் மக்கள் மாண்புறத் தக்க கல்விமுறையை வகுத்துள்ளேன். மடமை, வறுமை, அடிமை, சிறுமைகளை ஒழித்து யோகமும், விஞ்ஞானத் தொழில்களும், ஒழுக்கமும், விழுப்பமும், அறிவும் ஆற்றலும், அழகும் அருளும், அன்பும் இன்பமும், ஆற்றலும் ஊற்றமும் பொலியும் கல்வி முறையை வகுத்து வடலூரில் "அருட்கழகம்" நாட்ட மன்றாடினேன். 'அன்று என் சொல் ஏறவில்லை' இனி எனக்கு நேரமில்லை. எனக்கு எஞ்சிய சில ஆண்டுகளில் என் எழுத்தோவியங்களைச் செப்பனிட்டு மனித சமுதாயத்திற்குத் தரவே ஆயுள் சரியாயிருக்கும். ஆண்டவன் கொடுத்த பணிகளை மீறி ஆணவப் பணிகளை மேற்கொண்டால் என்மூச்சு வீணாகும். பிறரைப் பொருள் கேட்டுப் பெரிய கட்டிடங்கள் எழுப்பி ஆரவாரமாக விழாக்கள் நடத்திப் பகட்ட எனக்கு நேரம் ஏது? ஓலை வருமுன் வேலை முடித்துச் செல்ல வேண்டும். வாழ்க்கை நாடகத்தில் ஐந்தாவது அங்கம் நடக்கிறது. எனக்கு இறைவன் கொடுத்த பணியை முடித்து அதன் பயனை ஐந்

தெழுத்துப் படிகளில் வைத்துச் செல்வதே சிறப்பு—ஆதலால் வள்ளற் பெருமான் உள்ளத் துடிப்பை எழுதித் தந்துள்ளேன். இயன்றவர் இயன்றதை இயற்றுக!

டர்பான் அன்பரைக் கொண்டு அங்கே அரிய ஆக்க வேலை நடத்த ஊக்கியுள்ளேன். மாசற்ற அருட்பா அன்பர் ஆர்வங் கொண்டு வள்ளலார் திருவுருவை என் மடியில் வைத்துப் படம் பிடித்து மகிழ்ந்தனர். வள்ளலார் என் மடியில் மட்டுமா? என் முடியிலும் இருக்கிறார்.

டர்பான் அருட்பாக் கழகம் தனிப்பெரும் அருட்பணிகளைச் செய்துள்ளது. சைவசித்தாந்தமான உலகச் சமயத்தை அடிப் படையாகக் கொண்டே அஃது அருள் முழக்கம் செய்கிறது.

அருட்பாவுடன் தேவாரத் திருவாசகங்களும் திருமுறைப் பாடல்களும் அங்கே முழங்குகின்றன, மாணிக்கவாசகர் "நமச் சிவாய வாழ்க! சிவாயநம எனப் பெற்றேன் போற்றியோ நமச் சிவாய" எனப் பாடினர்.

வள்ளலார் "நமச்சிவாயத்தை நான் மறவேனே; நமச் சிவாய என்று இடு நீறே" என்று முழுச் சிவநேயத்துடன் பாடினர். அவர் சம்பந்தப் பெருமானையே தம் ஆசானகக் கொண்டார். சிற்றம்பலக் கனியான தனி நடராசனைச் சற்குரு மணியாக வணங்கினர். திருவாசகத்தை உயிர் நூலாகக் கொண்டார். வள்ளலார் திருநெறிச் சைவத்திற்கு மறுமலர்ச்சி யளித்த ஐந்தாங்குரவர் என்றே கொள்வோம். திருமுறை நூல்களில், ஆழ்ந்த பயிற்சியிருந்தாலே அருட்பாவை ஆழம் பார்க்க முடியும். மகாதேவ மாலையை ஆய்ந்தால் இந்த உண்மை புலப்படும்.

அருட்பாக் கழகம் அருட்கோயில் எழுப்பிக் கருவறையில் தத்துவ வடிவான இலிங்கத்தை நாட்டி, நடராசர், முருகன், கணபதியுருக்களை விளக்கி, வழிபடுகிறது. வள்ளலார் திருவுரு வுக்கு விளக்கு வழிபாடு செய்கிறது. "இராமலிங்க சோதி" என்ற இசைச் சொற்பொழிவை திருமுறை திருவாசகக் கோட்பாடு களுடன் ஆற்றி வள்ளலாருக்கு வணக்கம் செலுத்தி விடை கொண்டேன்.

ஆதிநாத சைவசித்தர்
அன்புராம லிங்கமே
சாதிசமய பேதமற்ற
சோதிராம லிங்கமே

சகத்திலுள்ள யாவரும்
　　சரிநிகர் சமானராய்
இகத்திலே பரத்தினை
　　இணைத்தராம லிங்கமே
கலகமின்றி உலகமாந்தர்
　　கலந்துவாழச் செய்தனர்
இலகுதீர்க்க தரிசியான
　　எங்கள்ராம லிங்கமே
அள்ளியள்ளி அருள்பொழிந்த
　　அமுதவான் கருணையே
உள்ளமெல்லாம் கொள்ளைகொண்ட
　　உண்மைராம லிங்கமே
ஓம்சோதிராம லிங்கம்
　　ஓம்சோதிராம லிங்கம்
ஓம்சோதிராம லிங்கம்
　　ஓம்சோதி ஓம்.

என்ற முழக்கத்துடன் அருட்பாக் கழகத்திற்கு நன்றி கூறினேன்.

டர்பான் அருட்பாக் கழகம் நம் தமிழகத்திலே, திருநெல்வேலிக்கு அருகே, அமைதியான இடத்திலே அருட்சாலை அமைத்துள்ளது. அதை அருளன்பர் முத்தையா பிள்ளை எப்படியோ நடத்துகிறார். அங்கே S. V. ஐயர் ஒரு பள்ளிக்கூடம் கட்டியுள்ளார்; அம்மாள் ஒரு மருத்துவசாலை அமைத்துள்ளார். அவை சில மாதங்களே நடந்து முடிந்தன. அருட்கோயில் அழகாக அமைந்துள்ளது. வள்ளலார் உருவம் வயங்குகிறது. வழிபாடு நடக்கிறது, சுற்றிலும் மலர் மணக்கிறது; கனி நகைக்கிறது. தென்னை, மா, பலா, வாழை, கொய்யா முதலிய மரங்கள் பசும்பொலிவுடன் வளர்கின்றன. வயலில் நெல்லும், நிலக்கடலையும் விளைகின்றன. பயிர்த்தொழிலாளருக்கு வேலை கிடைக்கிறது. டர்பான் அன்பர் தூண்ட, முத்தையா வேண்ட நான் ஆண்டுவிழாவுக்குத் தலைமை தாங்கினேன். அருட்சாலையைக் கண்டேன். அங்கே ஆண்டுதோறும் அருட்பாத் தொண்டர் பயிற்சி நடைபெறலாம்; தைப்பூசத் திருநாளைச் சிறப்பாக நடத்தலாம்; சிறுசிறு கைத்தொழில்களை நாட்டி ஏழைகளுக்கு உழைப்பும் பிழைப்பும் தரலாம். நல்ல சித்தவைத்திய சாலை நாட்டி நோய் தீர்க்கலாம். உழைப்பாளிகள் உருகும்படி அருட்பாக்களை ஒலிபெருக்கி வைத்துப் பாடலாம். துண்டுப் பிரசுரங்களால் அருட்சமயத்தைப் பரப்பலாம். பிறகு என்ன செய்யலாம் என்பதைச் சிந்திப்போம்.

அருட்பாத் திருநாள் பெரிய கொட்டகையில் மிகச்சிறப்பாக நடந்தது. வள்ளலார் படம் அணிசெய்யப் பெற்று அதன்முன் ஆயிரம் திரிகளுடன் மகரவிளக்கு எரிந்தது. பல புலவர் பேசினர். நான் "ஜோதியுகச் சுடர்" என்பது பற்றி இசைச் சொற்பொழிவாற்றினேன்.

இந்த அருட் சாலையை நல்ல முறையில் நடத்த டர்பான் அன்பர் என் கருத்துகளை ஏற்றனர்; இனிப் போற்றுவர். இத்துடன் அருட்பாக் கழகத்திற்கு நன்றி கூறி மேலே செல்வோம். சாதியிருள் ஒழிக! ஜோதியருள் பொலிக!

(தொடரும்)

நினைப்பிரியாத நிலைமையும் வேண்டும்

தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலுந் தெங்கின்
தனிப்பாலுஞ் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்அளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடுந்தெள் அமுதே
அனித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே
அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கல் அணிந்தருளே.

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

—திருவருட்பா.

பேச்சுத் தமிழில் - ஒரு புதிய பண்பு விகுதி

[செஞ்சொற் கொண்டல், புலவர், டாக்டர்

சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling., Phd.,

தமிழ்த் துணைப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்]

1. பழைய புதிய விகுதிகள் :

பேச்சுத் தமிழில் ஒரு புதிய பண்புப் பெயர் விகுதி இன்று வழங்கிவரக் காண்கின்றோம். -மை என்பது பழந்தமிழில் வழங்கிவந்த ஒன்று. அதுவும் இன்று வாழ்கின்றது: எடுத்துக் காட்டு :

அறியா - மை
தெரியா - மை
சிறு - மை
செம் - மை

இவற்றைப் போன்றே -தனம் என்ற புதிய விகுதி ஒன்றும் வழங்கி வருகின்றது. பெருவாரியாக இப் பண்புப் பெயர் விகுதி உள்ளது. ஆனால், இவற்றைப் பெரும்பாலும் நற்பொருளின் மாட்டுப் பண்புப் பெயராக்க விகுதிகளாகத் தமிழ்மக்கள் ஆள்வதில்லை. நல்லதல்லாத பண்புகளையே இவ்விகுதி சேர்த்துத் தமிழ்மக்கள் கூறுகின்றனர். எ - டு:

சோம்பேறித் - தனம்
கயவாளித் - தனம்
பித்துக்கொளித் - தனம்
முட்டாள் - தனம்
தெரியாத் - தனம்

2. பொருட்சார்பு :

சிறுபான்மை நற்பொருளின்மாட்டும் இப் பண்புப் பெயராக்க விகுதி இணைக்கப்படும்; இதற்கு எடுத்துக்காட்டுகள் நிரம்பக் காண முடியாது. எ - டு:

புத்திசாலித் - தனம்
கெட்டிக்காரத் - தனம்
சுட்டித் - தனம்

2-1. தன்மை - தனம் :

இனி, 'தன்மை' என்ற சொல் 'தனம்' என்ற விகுதியாக மாறிற்று என்று கொள்ள இடம் உள்ளது. பொருள் அமைப்பு அவ்வாறு கருத இடம் அளிக்கின்றது. புத்திசாலித் தன்மை, கெட்டிக்காரத் தன்மை, சுட்டித்தன்மை, அறியாத்தன்மை என்பனவற்றையே 'புத்திசாலித்தனம்', 'கெட்டிக்காரத்தனம்', 'சுட்டித்தனம்,' 'அறியாத்தனம்' என்று கூறுகின்றமை இதற்குச் சான்ருக அமைகின்றது.

2-2. - மை - அமைப்பு :

பழைய - மை விகுதி பெரும்பாலும், பண்புப்பகுதிகளோடும் (Qualitative bases) சிறுபான்மை பெயர்ச்சொற்களோடும் ஒட்டி வழங்கி வரும் இயல்புடையது. எ - டு :

சிறு - மை
பெரு - மை
கரு - மை
ஏழை - மை
கூழை - மை
பாழி - மை

என்றெல்லாம் பல எடுத்துக்காட்டுக்களைப் பழைய இலக்கியங்களிற் காணலாம்.

தனம் - அமைப்பு :

இப் புதிய பண்பு விகுதியாகிய - தனம் என்பதோ, பெரும்பான்மையும் பண்புப் பெயர்களுடனும், சிறுபான்மை பெயரெச்சங்களுடனும் இணைகின்றது. பண்புப் பெயர்களுடன் இணைதல் ஆகிய பெரும்பான்மை வழக்கு முன்னர்க் காட்டிய எடுத்துக் காட்டுக்களால் இனிது விளங்கும். எ - டு :

அறியாத் - தனம்
தெரியாத் - தனம்
சின்னத் - தனம்

என்பனவற்றில், பெயரெச்சங்களுடன் இணைதலைக் காணலாம். இவற்றை அறியாமை + தனம், தெரியாமை + தனம் எனக் கொண்டு, மை விகுதி கெட்ட பண்புப் பெயர்களோடு சேர்ந்த தாகக் கொள்ளுவதும் பொருந்தும்.

விளையாட்டுத் - தனம்

எனும்போது தொழிற்பெயருடன் இணைதலைக் காண முடிகின்றது.

குடித் - தனம்
மெத் - தனம்

என்ற ஆட்சிகளைக் கூர்ந்து நோக்கும்போது, குடிமை, மெதுவாந்தன்மை ஆகிய ஈறுகெட்ட பண்புப்பெயர்களுடன் இவ் விகுதி இணைதலையும் காணலாம்.

பேச்சுத்தமிழும் ஒரு கூறே :

பேச்சுத் தமிழில் வரும் இத்தகைய இலக்கண மாற்றங்களை யும் அமைப்புக்களையும் நாம் புறக்கணிக்க முடியாது. எழுத்துத் தமிழைப்போன்று, பேச்சுத் தமிழும் நம் செந்தமிழின் ஒரு கூறே ஆகும். ஆதலின் அதிற் காணப்பெறும் மாற்றங்கள் சிந்தித்துக் கொள்ளற்கு உரியனவே ஆகும். தமிழ் அறிஞர்கள் இவற்றைச் சிந்தித்துத் தெளிந்து எடுத்து வரும் முடிவுகள் தமிழ்மொழியியலுக்குப் பெரிதும் துணைபுரிந்துவரும் முடிவுகள் ஆகும். திராவிட மொழிக் குடும்பத்தின் சிறப்பியல்புகளை ஆராய்ந்த டாக்டர் கால்டுவெல் எழுத்துத் தமிழ் வழக்குகளை மட்டுமே ஆராய்ந்தார்; ஆனால் சூல்சு பிளாக்கு (Jules Block) என்னும் வெளிநாட்டறிஞர் அதன்பிறகு ஆராய்ந்து வெளியிட்ட திராவிட மொழிகள் பற்றிய ஒப்பியல் ஆராய்ச்சி நூல், இருவகை வழக்குகளையும் ஆராய்ந்து முடிவு தந்தது. ஒருமொழி உயிருடன் வழங்கி வருகின்றது என்பது அது மக்களால் பேசப்பட்டு வரும் இயல்பு உடையதாக இருத்தலே ஆகும். இன்று எழுத்து மொழி ஒன்றே கொண்டு வரும் வடமொழி முதலியவற்றைச் **'செத்த மொழிகள்'** (dead languages) என்று கூறுவதையும் நாம் நோக்குதல் வேண்டும்.

இந்த அடிப்படையில்தான், பேச்சுத் தமிழில் வழங்கி வரும் ஒரு புதிய பண்பு விகுதி இக் கட்டுரையில் ஆராயப் பெற்றது.

மொழி

மெல்லிய இனிய மேவரு தகுந
இவை மொழியாம்.

—சங்கப் புலவர் அம்மூவனார்

புலிசைப் பத்து*

[பேராசிரியர், ஆ. சிவலிங்கனார், மயிலம்]

1. திருநாவுக் கரசருக்குத் தீர்வரிய
தொருசூலை சிறக்கத் தீர்த்தே
ஒருநாமம் மருள்நீக்கி யெனமுன்னர்
உள்ளதனை உலகோர் ஏதுப்
பெருநாமம் எனக்கொளுமா றுண்டதுபோல்
எனையருள்க பெரிய ஞானி
வருநாமம் உடையவர்வாழ் புலிசைநகர்
அமர்ந்தருளும் அரனே போற்றி.

2. தோன்றாத துணையென்று நினைச்சொன்னார்
அப்பரவர் துருவிப் பார்க்கின்
தோன்றாது நீயிருக்க இயலாதென்
றடியவர்கள் துதித்து மீண்டும்
தோன்றாத பிறவியதை யருளுகென
வழிபடுவார் துயரைப் போக்கித்
தோன்றாத காய்தருபா திரிப்புலியூர்
வாழ்சிவனைத் துதித்து வாழ்வாம்.

3. உரையேறு திருநாவுக் கரசரவர்
உவர்க்கடலோ டுறும்பி றப்புக்
கரையேற விட்டருளி யதுநினைக்க
எனதுதுயர்க் கடல்கள் தம்மின்
கரையேற விட்டருளிக் கனபொருளும்
அருளுவது கடிதோ சொல்வாய்
தரையேறு புகழ்திருப்பா திரிப்புலியூர்
தனிலமரும் தலைமைத் தேவே.

4. குருவடிவை நினதுதிரு வடிவெனவே
கூறிடுவர் குவல யத்தோர்
குருவடிவில் குறைவருமேல் அதுநினைந்தே
யிகழ்வதுதான் குறைவாம் என்பர்

---

* புலிசை என்பது திருப்பாதிரிப்புலியூர்க்குள்ள ஒரு பெயர். அவ்வூர் இறைவன்மீது பாடப்பட்டது இது.

குருவடிவில் குறைகாணும் குணமுடையேன்
உயர்வுறுமா றுரையாய் நால்வர்
குருவடிவில் ஞானமுணர் தரவருள்வாய்
புலிசைவரு கோவே போற்றி.

5. பெரும்பொருளுக் கலேயாமல் பிணிபலகொண்
டுழலாமல் பெரிதா நூலில்
வரும்பொருளுக் காழாமல் வல்வழக்கிட்
டோயாமல் வருவார் போவார்
தரும்பொருள்சொற் கழியாமல் ஒருநாளும்
குறைவறியா தாகும் இன்பப்
பெரும்பொருளே எனக்கருள்பா திரிப்புலியூர்
தனிலமரும் பெரிய வாழ்வே.

6. குலவுதிருப் பாற்கடலில் துயிலாமல்
திருமாலும் குடக்கே நிற்க
உலகுதிருப் பேறுபெறத் திருமணஞ்செய்
தருள்முருகன் தோன்றத் தெற்கே
இலகுதிருப் புலவியுடன் உமையவள்செ
லாவகையில் கெடிலக் கங்கை
நிலவுவடக் கிருப்பவருள் புலிசைநகர்ச்
சிவனெனேயே நிதமும் காப்பான்.

7. சீர்தருவாய் சிவலிங்கப் பெருமானே
அடியவனேன் நெடுநாள் நின்றன்
பேர்கருணை னந்தம்பெற ஒருசிறுசம்
பந்தமிலேன் எனினும் மென்சொல்
தார்தருபா மாலேயுடன் வணங்கிடுவேன்
அருள்கவெனத் தண்ட பாணிப்
பேர்பெறுவான் தாதையுயர் புலிசைதனில்
அமர்சிவனே பெரிய வாழ்வே.

8. *கரையேற விட்டநகர் முருகனேயாண்
டதனில்ஒரு கால்வந் தங்கே
உரையேறு திருமணம்செய் வித்துமகிழ்
இறையவனே உறுமாத் துன்பக்

* கரையேறவிட்ட நகர் - இது வண்டிப்பாளயம் என இன்று வழங்கப்படுகிறது. அவ்வூர் முருகன் கோயில் பெருவிழாவில் ஆறும் திருவிழா அன்று, திருப்பாதிரிப்புலியூர் இறைவன் எழுந்தருளி முருகப் பெருமானுக்குத் திருமணம் செய்வித்து மீளும் சிறப்பு விழாவுண்டு.

கரையேற எனதுமனம் விழையுமதை
யருளுவதுன் கடனே யன்றோ
அரையேறு மதியணிசெஞ் சடையுடையாய்
புலிசைநகர் அமரும் வாழ்வே.

9. திருப்பாதி ரிப்புலியூர் தினமொருகால்
வந்துவலந் திரும்பி ஞல்தான்
விருப்பான யாவுமடைந் திடுமமைதி
பெருகுவராம் எனவே நின்னை
அருப்பான மலருடனே அருச்சித்து
வழிபடினே அளவில் இன்பம்
இருப்பான பொருளாகும் என்பதற்கோர்
ஐயமிலை இறைவா போற்றி.

10. மனமதனில் துயரவைகள் மண்டிவரும்
போதெனது வளர்இத் தேக
வனமதனில் பழகிவரும் புலன்களெனும்
விலங்குகளின் அலைவைக் கண்டு
சினமதனில் வரவில்விடை வருபவனே
திருவருள்செய் சிரித்து நன்றே
புனமருவு வள்ளியிறை யுரைகொள்செவி
யுடையவனே புலிசை வாழ்வே.

உலகப் பொதுநோக்காளர் கழக நூற்றுண்டு விழா

சென்னையிலுள்ள உலகப் பொது நோக்காளர் கழக (Cosmopolitan Club) நூற்றுண்டு விழா 6-1-74 இல் சென்னையில் நடைபெற்றது. குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள், கழகத்தின் நூற்றுண்டு விழாக் கட்டிடத்தின் அடிக்கல்லை நாட்டினுர். கழகத்தின் தலைவரும் உயர்நீதிமன்ற நடுவருமான திரு. கே வீராசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினுர்கள். தமிழக ஆளுநர் கே. கே. ஷா, முதல்வர் டாக்டர் கலைஞர் கருணுநிதி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

மாண்புமிகு கிரி அவர்கள் தமது உரையில் உலகப் பொது நோக்காளர் கழகத்தின் பணிச் சிறப்புகளைப் பாராட்டிப் பேசியபோது 1915 முதல் 1937 வரை தாம் இக்கழகத்தின் உறுப்பினராக இருந்ததாகவும் குறிப்பிட்டார். முதல்வர் கலைஞர் அவர்கள், கழகத்தின் பணிகளைப் பாராட்டிப் பேசியபோது, சாதி சமய வேறுபாடுகளைக் கடந்து பலரும் கூடி நாட்டின் பல சிக்கல்களுக்குத் தீர்வுகாண இப்படிப்பட்ட கழகங்கள் மிகமிக இன்றியமையாதனவாகும் என்றுர். கழகத்தின் துணைத் தலைவர் ஆர். சதாசிவம் அவர்கள் நன்றி கூறினுர்.

தமிழில் எழுதுவோம்

[ஆட்சிச் சொற்காவலர் கீ. இராமலிங்கனுர், எம்.ஏ.]

(முன்பரல் உகசஆம் பக்கத் தொடர்ச்சி)

5. மொழி பெறு வகைகள்

ஆட்சிக்குத் தேவையான சொற்கள் தமிழில் கிடைக்குமா? என்று எவரும் ஐயுற வேண்டியதில்லை. மொழி பெறக்கூடிய வழிகள் சிலவற்றை, இங்குக் காண்போம். ஐந்து வகையான வாயில்கள், சொற்களைச் சுரந்து தருவனவாகும். அவற்றை இவ்வாறு வரிசைப்படுத்தலாம்: (i) வழக்கிலுள்ள சொற்கள், (ii) இலக்கியம் வழங்கும் சொற்கள், (iii) கல்வெட்டில் காணும் சொற்கள், (iv) ஆக்கும் சொற்கள், (v) ஏற்கும் சொற்கள் ஒவ்வொன்றையும் பற்றி ஈண்டு ஆராய்வோம்.

(i) பேச்சு வழக்கிலுள்ள சொற்கள் :

அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்திவரும் சொற்களில் பல, ஆட்சித்துறைக்கும் பெரிதும் பொருத்தமாக அமைவன வாகும். அச் சொற்கள் இலக்கியங்களில் காணப்பெறலாம்; பெருமலும் இருக்கலாம். நூல்களில் அவை ஏற்கனவே வழங்கப்பெறவில்லை என்னும் ஏது ஒன்றைக் காட்டியே, அச் சொற்களை ஆளுதற்குத் தடை சொல்வாரும் சிலர் உண்டு. கவிப்பெரு மன்னர் கம்பருக்கும், ஒள்ளிய புலவர் ஒட்டக்கூத்த ருக்கும் இத்தகைய ஒரு சொல் குறித்து சச்சரவு ஏற்பட்டதாக வழங்கும் கதையொன்று இதுபோது நமது நினைவுக்கு வரும்.

அக் கதை வருமாறு: தாம் எழுதிய இராமாயணத்தில் கம்பர் 'துமி' என்னும் ஒரு சொல்லைப் பயன்படுத்தினர். 'நீர்த் திவலை' அல்லது 'துளி' என்னும் பொருளில் அச்சொல் பயன் படுத்தப்பெற்றது. இலக்கியம் எதிலும் அச்சொல் காணப்பட வில்லையென்றும், எனவே, கம்பர் அச் சொல்லை வழங்கியதால் மொழியில் இல்லாத ஒரு சொல்லைப் பெய்து எழுதினர் என்றும், ஒட்டக்கூத்தர் அந் நூல் அரங்கேற வந்தபோது நூலில் குற்றஞ்சாற்றினர். மக்களால் வழங்கப்பெறும் சொல்லே அது, ஆதலின், குற்றச்சாட்டுச் செல்லாது என்ருர் கம்பர். மக்கள் அச் சொல்லைப் பயன்படுத்துகின்றனர் என்பதை எண்பிக்க வேண்டும் என்ருர் ஒட்டக்கூத்தர்.

மறுநாள் காலே ஒட்டக்கூத்தரைக் கம்பர் அழைத்துக் கொண்டு ஒரு தெரு வழியே சென்ருர். ஓரிடத்தில் பால் கறந்துகொண்டிருந்தனர். அங்கிருந்த ஓர் அம்மையார், தம் பக்கத்தில் இருந்த தம் மக்களிடம், 'தூமி' மேலே படப் போகிறது, தொலேவில் செல்லுங்கள்'' என்று சொன்னுர். ஒட்டக்கூத்தருக்கு இதனைச் சுட்டிக்காட்டினுர் கம்பர். சச்சரவு முடிந்தது. 'தூமி' என்னும் சொல் தமிழ்மொழிக்கு உரிய சொல்லே என்பதைக் கம்ப இராமாயணம் அரங்கேறிய அவையி லிருந்து அனைவருங்கூட ஏற்றுக்கொண்டனர்.

'தூமி'யைப் போன்று, நாட்டில் எத்தனையோ தமிழ்ச் சொற்கள் மக்களால் ஆளப்பெற்று வருகின்றன என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது. இலக்கிய இலக்கண நூல்களில் இருக்கும் சொற்கள் மட்டுந்தாம், தமிழுக்குரிய சொற்கள் என்று கொண்டுவிடுவது பொருத்தமாகாது. நமக்குக் கிடைத்துள்ள தமிழ் நூல்கள் மிகச்சிலவே கிடைத்துள்ளவற்றைப் போன்று பலமடங்கு நூல்கள் பாழாகிவிட்டிருக்கின்றன. இன்றுங்கூட, பதினெட்டாம் பெருக்கன்று, பழைய ஏடுகளே ஆற்றில் விட்டு வரும் வழக்கம் நம்மைவிட்டு அகலவில்லே.

கிடைத்துள்ள மிகச் சில நூல்களும், பலமுறை பார்த் தெழுதப்பட்டுவிட்டவையாகும். ''எழுதினவன் ஏட்டைக் கெடுத் தான்'' என்னும் பழமொழி, இங்ஙனம் பார்த்தெழுதியவர் களுக்கு விலக்கு ஆகாது. ஒரு சொல் நூல் வழக்கில் இல்லே என்ருல், அது தமிழ்ச்சொல் அன்று என்று முடிவுகட்டி விடுவது கூடாது. கைக்கு எட்டியுள்ள கையளவு நூல்களில் காணும் சொற்களில் மட்டுமேயன்றி, நாட்டின் பல பகுதிகளில் வழங்கும் பல சொற்களிலும் ஆட்சித்துறைக்கு ஏற்ற தமிழ்ச்சொற்கள் பல இருக்கின்றன என்பதை நாம் நினேவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் புலமை படைத்த சிலர், நூல் வழக்கு ஒன்றையே போற்றுகின்றனர். உலக வழக்கில் மட்டும் உள்ள சொல், தமிழ்ச்சொல் ஆகாது என்று கூறும் அளவுக்கும் அவர்களது தமிழ்ப்பற்று செலகிறது. சில ஆண்டுகளுக்கு முன், ஒரு கல்லூரி மாணவர் மன்ற விழாவிலே பேசும்போது 'துவக்கம்', 'தொடக்கம்' என்னும் இரண்டு சொற்களுக்குமுள்ள பொருள் வேறுபாட்டை விளக்கிச் சொன் னேன். ''முதன்முறையாக ஒரு செயல் நிகழ்கின்றதே. அது 'துவக்கம்' எனப்பெறும். இக் கல்லூரியை முதன்முதலில் அமைத்த செயலேக் கூறும்போது 'இத்தனையாமாண்டு இக்

கல்லூரி துவங்கப்பெற்றது' என்போம். இவ்வாண்டு கோடை விடுமுறைக்குப் பிறகு, கல்லூரி திறக்கப்பெற்ற செயலைச் சொல்லும்போது, 'கல்லூரி சூன் 20 ஆம் நாள் தொடங்கப் பெற்றது' என்போம்'' என்பது என் பேச்சின் ஒரு பகுதி.

நன்றி கூறவந்த பேராசிரியர் இவ்வாறு உரைத்தார். ''துவக்கம்'' என்பது தமிழ்ச்சொல ஆகாது. தொல்காப்பியர் 'தொடக்கம்' என்னும் ஒன்றைத்தான் கூறியிருக்கிறார். எனவே, 'துவக்கம் என்னும் சொல்லை ஆள்வது சரியன்று' என்றார். மேலும் விளக்கிக்கூற எனக்கு வாய்ப்பு இல்லாமற் போயிற்று. 'தாயம்' ஆடும்போது. 'தோய்ந்தது', 'தோய வில்லை' என்னும் சொற்கள் பயன்படுத்தப்பெறுகின்றன. தோய்ந்தால்தான் ஆட்டம் மேற்செல்லும் என்பதையறிவோம். 'தோய்தல்' என்னும் இச்சொல் 'துவங்குதல்' என்னும் சொல் லின் திருந்திய வடிவமே. 'துவங்குதல்' என்பது 'துவைதல்' என்று மருவிப் பின் 'தோய்தல்' என்று திரிந்தது என்று கரந்தை அருந்தமிழ் இதழான 'தமிழ்ப் பொழிலில்' சொல் லாராய்ச்சி அறிஞர் திரு. தியாகராசன் அவர்கள் பல ஆண்டு களுக்கு முன்பு எழுதியிருந்த செய்தியையும் நான் அக் கூட்டத் தில் சொல்லமுடியாது போயிற்றே என்று இரங்கினேன்.

ஆட்சித்துறையில் பயன்படக்கூடிய சொற்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில், பலப்பல வகையாக, மக்களால் வழங்கப் பெற்று வருகின்றன. அவற்றைத் திரட்டி, ஆராய்ந்து, இன் றைய ஆட்சிக்குப் பொருத்தமான சொற்களைத் தேர்ந்து கொள்ளும் கடமை நமக்கு உண்டு. நாட்டில் ஆங்காங்கே இருக்கும் அறிஞர்கள், சிறப்பாக, ஆசிரியர்களாகப் பணியாற்று பவர்கள், இப் பணியில் பேருதவி புரியலாம். ஆங்காங்கு வழங்கும் ஆட்சிச் சார்புடைய சொற்களை. அவர்கள் சேமித்து, சென்னைக் குறளகத்திலுள்ள அரசின் தமிழ் வளர்ச்சி இயக்கத் திற்கு அனுப்பலாம். என்னைப் போன்றவர்களுக்கு அனுப்பி னாலும், விரைந்து அச் சொற்களை ஆட்சிக்குக் கொண்டுவருவ தற்கு ஆவன செய்ய அவர்கள் ஆயத்தமாயிருப்பார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடந்துவரும் தமிழக அரசின் ஆட்சிமொழிக் குழுவில் நானும் ஓர் உறுப் பினன் என்பதை ஈண்டு தெரிவித்துக்கொள்வது பொருத்த மற்றதாகாது.

நாட்டில் நான் கண்ட வழக்காற்றுச் சொற்கள் சிலவற்றை, இங்கே பட்டியிட்டுத் தந்து விளக்குவதற்கு இடம்போதாது. பேச்சு வழக்கிலுள்ள இச் சொற்கள், ஆட்சிக்கு எவ்வளவு

இன்றியமையாதன என்பதை மட்டும் வற்புறுத்திவிட்டு மேற் செல்கிறேன்.

(ii) இலக்கியம் வழங்கும் சொற்கள் :

இன்றைய ஆட்சிக்குரிய அழகு அழகான சொற்கள் நம் இலக்கியங்களில் ஏராளமாகக் கிடைக்கின்றன. இப்போது வழங்கும் அயல்மொழிச் சொற்களை அப்படியே வைத்துக் கொள்ளமாட்டாமல், ஏன் இறந்துபோன தமிழ்ச் சொற்களை இலக்கியங்களில் தேடி அலையவேண்டும் என்று சொல்லுகின்ற தமிழர்களையும் கண்டிருக்கிறேன். ஆனால், அவர்கள் மிகமிகச் சிலரே என்று அமைதிகொள்ள வேண்டும். சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களில் காணும் சொற்கள் சிலவற்றை இங்கே பட்டியிட்டுத் தருகிறேன். அவற்றைப் படிக்கும்போதே அவற்றின் செவ்விய வடிவமும் நிரம்பிய பொருத்தமும், மகிழ்ச்சி பொங்கச் செய்யும்.

Abolish - கட்டழி
Warden - காப்பனர்
Bonus - நன்னர்
Connoisseur - நயவன்
Projection - பிதிர்வு (encroachment)
Removing encroachment - பிதிர்வு பெயர்த்தல்
Junior - பின்னன் (பின்னவர்)
Junior to me - எனக்குப் பின்னவர்
Senior - முன்னன் (முன்னவர்)
Senior to me - என் முன்னவர்
Strangers - புதுவோர்
Spare axle - சேம அச்சு
Spare Tyre & Tube inflated Stepney - சேமச்சக்கரம்
Advice - மதிமொழி
Conviction - மனக்கோள்
Second Crop - மறுகால்
Refuge - புக்கில்
Circus Arena, Circus - வட்டு, வட்டில்
Hired Person - வினைவன்
Produce - முந்துறுத்து
Produce before to judge - நடுவன் முந்துறுத்து
Conversation - சொல்லாடல்
An able lady conversationalist- சொல்லாட்டி
Tribunal - அவையம்
Dancers - ஆடுநர்
Resignation - ஒருவல்
Resign - ஒருவு
Weak Mind - ஒட்டை மனம்
Quick - ஒல்லை
Last Days - கடைநாள்
Cancel - உலை, உலைத்துவிடு,
Concellation-உலைவு, உலைத்து விடல்
Players of Musical Instruments - இயவர்
Maternity Home - ஈனில்
Bathing Dress - ஈரணி
Nadhaswaram - ஏழில்
Cooking Utensils - அடுகலம்
Dried up tank - அறுகுளம்

Drinking water tank - உண் குளம்
Cloth business - அறுவை வணிகம்
Machine - எந்திரம்
Impregnable Bouleward - ஆர் அரண்
Spokes - ஆரை, ஆரம்
At that time - அக்கால்
Retinue - உழையோர்
Bottle - மணிக்கலம்
Estuary - புகார்
Survey - புலவரை
Kindergarten Teacher - பாலாசிரியர்
Devastating Rains - அழி பெயல்
Drama Stage - ஆடுகளம்
Forest Bouleward - அருப்பு
Fort having forest Bouleward - அருப்புக்கோட்டை
Selfness - என் இன்றி
Light Grey Hair - அரிநரை
To stand before a person to curry his favour - முகம் புகுதல்

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களில் இங்கும் அங்கும் கண்ணிற்பட்ட சொற்களே இவை. இந்த நோக்கோடு இவ்விரு தொகுப்பு நூல்களையும் ஆராய்ந்தால் இன்னும் எத்தனையோ ஆட்சிச் சொற்கள் கிடைக்கும் என்பது திண்ணம். இங்ஙனமே, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய இலக்கியங்களையும், தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும் இன்று வரையுள்ள பிற்கால நூல்களையும் ஆராய்ந்து, அவற்றில் ஈண்டைக்குப் பயன்படும் ஆட்சிச் சொற்களைத் திரட்ட வேண்டுவது நம்மவர் கடமையாம்.

மேற்காணும் ஒவ்வொரு சொல்லையும், சிந்தனை உரை கல்லிலே தேய்த்து, அதன் பொருள் பொதிந்த பொன் வண்ணத்தைப் போற்றி இன்புற வேண்டுகிறேன். இச் சொற்கள், பிறமொழிச் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற் களாக அமைந்திருப்பதுடன் பெரும்பாலானவை எழுத்துக்கு எழுத்து, அயல் சொற்களைவிட, அளவில் சிறியனவாக இருப்பதையும் கண்டு மகிழவேண்டும். வடிவழகும், ஓசை நயமும் உவகை பெருக்குவன.

(iii) கல்வெட்டில் காணும் சொற்கள்

கல்வெட்டுகளின் மொழியமைப்பு அவ்வளவு போற்றத் தக்கதாக இல்லையென்பது ஒப்புக்கொள்ள வேண்டியதேயா யினும், கல்வெட்டுகளில், ஆட்சிக்குரிய பல நல்ல சொற்கள் இல்லாமல் இல்லை என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். சில கல்வெட்டுகளையே நான் ஆராயவாய்த்தது. அவற்றில் கண்ட சொற்கள் சிலவற்றைக் கீழே தருகின்றேன். குறித்த

சில சொற்களைப் பற்றிய விளக்கமும் பின்னே வருகின்றது. சொற்கள், எத்துணைப் பொருள் நிறைந்தனவாகவும் பொருத்தம் மிக்கனவாகவும் இருக்கின்றன என்று பார்த்துப் பரிவுறலாம்.

Chief Secretary to Government - திருமந்திர ஓலை நாயகம்
Huzur Treasury Officer - பெரும் பண்டாரத்தர்
Treasury-பண்டாரம், கருவூலம்
Remitted into the Treasury - பண்டாரத்தில் ஒடுக்கின
Temple Executive Chief (Executive Officer of the Temple) -கோவில் நாயகம்
1st Crop, 2nd Crop, 3rd Crop land - ஒரு பூ, இரு பூ, முப் பூ நிலம்
Block - துண்டம்
Inalienable (Land) - குடிநீங்கா
Take possession of - கைக் கொண்டு
Agreed price - இசைந்த விலை
Care taker - நோக்கர்
Sub divide of land - நிலத்தைக் கூறுசெய்தல்
Tax Free land - இறையிலி நிலம்
Corpus of the Fund - முதற் பொருளின் உடல்
As usual - பழம்படி
Range - சிறகம்
High Road - பெருவழி
Document - ஆவணம்
Registration Office - ஆவணக் களரி
To levy a Fine - தண்டம் இடல்
To Collect a Fine - தண்டம் கொளல்
Punishment - தண்டனை
Collection – தண்டல்
Survey Stone - அளவுக்கல்
Hereditary - வழிவழி

இவற்றில் நாலைந்து சொற்களுக்கு மட்டும் விளக்கம் காண்போம் :

Range - சிறகம்.

ஒரு பறவையின் சிறகுபோல இருப்பது. இதில் தொடங்கி, இதுவரை செய்வது, என்னும் கருத்து இச் சொல்லில் உண்டு. அரிசியின் விலை படி 2 ரூபாயிலிருந்து 4 ரூபாய் வரை இருக்கிறது என்பதை Price of rice ranges from Rs. 2 per measure to Rs. 4/- என்போம். பறவையின் சிறகு மூடியுள்ள நிலையிலிருந்து விரிந்து செல்லும் நிலையுடையது. ஒரு தெருவில் வீடுகளின் இரண்டு வரிசைகளையும் தெருவின் "இரு சிறகங்கள்" என்போம். இங்குச் "சிறகம்" என்னும் சொல்லை "சரகம்" என்று மக்கள் தவருக வழங்குகின்றனர். கல்வெட்டில் "தென் மடவளாகத்தில், வடசிறகில்" என்பது போன்ற சொற்களே காணப்படுகின்றன. காட்டிலும் "Range" உண்டு. இது முதல் இது வரை என்று உள்ள காட்டின் ஒரு பகுதியைக் குறிப்

பதே "Range" 'Ranger' - சிறகர். Range officer - சிறக அலுவலர்.

Punishment - தண்டனை.

மாந்தர் துவக்கத்தில் ஒருவரை ஒரு குற்றத்திற்காக ஒறுக்கவேண்டி யேற்பட்டபோது, தடிகொண்டு அடிப்பதே மரபாக இருந்தது. தடித்தது தடி. இதனைத் தண்டு என்றும் சொல்வோம். வாழைத் தண்டு, கீரைத் தண்டு, என்னும் தொடர்களில் "தண்டு" என்பது தடித்த பகுதியையே குறிக்கிறது. ஒரு பொருள் நிரம்பக் கிடைப்பதாக இருக்கும்போது, அப்பொருள் "தண்டியாக இருக்கிறது" என்போம்.

காலப்போக்கில், தடியால்—தண்டால், அடிக்கும் தண்டனை கொடுக்கும் வழக்கும், வேறு வகையான ஒறுக்கும் முறைகளுக்கு இடங் கொடுத்தது. விலங்கிடுதல், அபராதம் விதித்தல், சிறையில் அடைத்தல், தூக்கிலிடுதல் முதலியவும் தண்டனைகள் ஆயின. முறைகள் வேறு வேருக ஆயினும், ஒறுத்தலைக் குறிக்கும் சொல் "தண்டனை" என்னும் அப்பழஞ் சொல்லாகவே இருந்து வந்தது; இன்றும் இருந்து வருகிறது.

"அபராதம்" என்று இக்காலத்தில் நாம் சொல்லும் பணத் தண்டனை, "தண்டம்" எனப்பெற்றது. "அபராதம்" போடுதல்-தண்டம் இடல், "அபராதம் வசூலித்தல்"-தண்டம் கொளல் என்று கல்வெட்டுகளில் குறித்திருப்பதைக் காணலாம்.

தண்டனை விதிப்பவரைத்-"தண்டனையர்" என்று சொல்வது பொருத்தம். அவர் முன்பு கொணரப் பெறுபவர் தண்டனைக்காக நிறுத்தப் பெறுகிறுர். குற்றம் எண்பிக்கப்படவில்லையெனின், தண்டனை இடாமல் குற்றம் சாட்டப்பட்டவரை விட்டுவிடுவாராயினும் தண்டனை விதிக்கும் ஆற்றலை அவரே பெற்றிருப்பார். ஆதலின் அவர் தண்டனையர். Magistrate-தண்டனையர், Divisional Magistrate-கோட்டத் தண்டனையர், Sub Divisional Magistrate-உட் கோட்டத் தண்டனையர். தடி, தண்டம், தரையில் விழுந்திருந்தால் எப்படியிருக்குமோ அப்படி ஒருவரை வணங்கும்போது உடலைத் தரையில் வீழ்த்தி விடுதல் "தண்டம்" இடுதல் எனப்படுகிறது. "தண்டம்" செய்தல் என்றும் சொல்வர்.

நடுத்தண்டு செயலற்று ஒரு வேலையும் இன்றிக் கீழே கிடந்து விடுவதுபோல நாம் எடுத்த ஒரு வேலை பயனற்றுப் போமாயின் அதனையும் "தண்டமாகப் போயிற்று" என்கிறோம். கைப்பொருள் வீணுகும்போதும், இங்ஙனம் "தண்டமாய்ப் போச்சு" என்போம்.

கொடுத்த பணத்தைக் கேட்டு வாங்கவேண்டிய போதும் வரியைத் தருமாறு கேட்கும்போதும், கையில் "தண்டு" கொண்டு செல்வது வழக்கம். அச்சுறுத்துவதற்குத் தடி தேவை. தண்டு கொண்டு கேட்பதால் அங்ஙனம் கேட்பவர் "தண்டலர்" ஆகிறார். கேட்டுப் பெறுவது "தண்டல்" ஆகிறது. "வசூல்" என்னும் உருதுச் சொல்லை, நாம் இப்போது தண்டலுக்கு ஈடாகப் பயன்படுத்தி வருகிறோம். தமிழ்ச் சொல் தண்டலே, Tax Collector - வரித் தண்டலர். Bill Collector - பட்டியல் தண்டர். வரித்தண்டல் பணிக்கு, மாவட்டத் தலைவராக இருந்தவரைக் கல்வெட்டுக் காலத்தில், "தண்டல் நாயகம்" என்றனர். Dt. Collector என்றால் மாவட்டத் தண்டலர் என்றே பொருள். ஆனால், இன்று அவர் தண்டல் வேலையைக்காட்டிலும் ஆளும் வேலையையே, பெரிதும் கவனிக்கிறார். எனவே, அவரை மாவட்ட ஆட்சியர் என்று சொல்லத் தொடங்கி விட்டோம்.

(iv) ஆக்கும் சொற்கள்

இத் தலைப்பில் கூற வேண்டியவற்றை அடுத்த இதழில் வரும் "6 புதுச் செய்முறை" என்னும் இயலில் கூறுவதற்காக நிறுத்தி வைக்கலாயிற்று.

(v) ஏற்கும் சொற்கள்

மேற்கண்ட நான்கு வழிகளிலும் கிடைக்காத சொற்களைப் பிற மொழிகளிலிருந்து, சிலகாலம் பயன்படுத்தி வருவதற்காக ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், தமிழ்ச் சொல் காண எல்லா முயற்சியும் செய்தும், சொல் கிடைக்கவில்லை யென்னும் நிலை ஏற்பட்ட பின்பே அயல்சொல்லை ஆட்சித்துறையில் ஏற்க வேண்டும். ஆட்சித்துறையில் எந்தக் கருத்துக்கும் தமிழ்ச் சொல் கிடைக்கவில்லை யென்னும் நிலைமையே நேராது என்பதே எனது நம்பிக்கை. என்னுடன் இந் நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்ளுகிறவர்கள் பலருண்டு. தமிழ் மொழியின் ஆற்றலை யுணர்ந்து தமிழ் உள்ளம் படைத்த எவர்தாம் இந் நம்பிக்கை கொள்ளாமல் இருப்பர்?

தமிழில் வேர்ச்சொல் உண்டாக்கிக் கொண்டு எந்த அயல் சொல்லையும் அதன் ஓசையைப் பெரும்பாலும் நிறுத்திக்கொண்டு தமிழ் மரபு கெடாத முறையில் மாற்றித் தமிழில் அமைத்துக் கொள்ள இயலுமாயின் அங்ஙனம் செய்வது விரும்பத்தக்கது என்று எண்ணுகிறேன். பின்வரும் சில சொற்களைச் சிந்திக்க வேண்டுகிறேன். பிற மொழிச் சொல்லின் பொருளை, ஏதோ ஒரு கோணத்தில் கண்டு புலப்படுத்திக்கொண்டு, தமிழ் வடிவில்,

தமிழ் இலக்கண மரபுக்கு மாருகாமல், இச் சொற்கள் ஒவ்வொன்றும் அமைந்திருப்பதைக் காணலாம்.

Quorum (No. required for conducting a meeting) —கோரெண். (கூட்டம் நடத்துவதற்குக் கோரும் எண்ணிக்கை)

Calendar - காலந்தேர் (நாள், கிழமை, மாதம் பிற்காலப் பகுதிகளைத் தேர்ந்துகொள்ளப் பயன்படும் கருவி)

Tutorial College - தோற்றேரியில் கல்லூரி (இத் தொடரைப் பயன்படுத்த எவரும் விரும்பார். தனிப் பயிற்சிக் கல்லூரி என்பதே ஏற்கத்தக்க தொடர். எனினும் ''டுடோரியல் கல்லூரி'' என்று சொல்ல ஆவலுள்ளவர்கள் அந்த ஆங்கில ஓசையை ஓரளவு அப்படியே அமைத்துக் கொண்டு, வேருெரு கோணத்தில் இத் தொடரில் வேறு எனக் கூறும், ''தோற்ரேரியல் கல்லூரி'' என்று சொல்லட்டுமே)

Cashier - காசாளர்

Bank - பாங்கு (''Bank'' என்ருல் ''கரை'' என்று பொருள். பணத்துக்குக் கரையிட்டு வைக்கும் இடமே ''Bank''

பணம் பாங்கான இடத்திற்குத் தமிழில் 'பணப்பாங்கு' அல்லது சுருக்கமாகப் 'பாங்கு' எனலாம். 'பாங்க்', 'பேங்க்'' 'பேங்கு', 'வங்கி' இவை 'Bank' என்னும் ஓசையைத் தமிழில் அமைத்துக்கொண்ட சொற்களே. 'வங்கி' என்னும் சொல்லுக்குத் தமிழில் பொருளுண்டு. 'கோணல்' என்று பொருள். முழங்கையில் பெண்கள் அணிந்து கொள்ளும் அணிகலனுக்கு 'வங்கி' என்று பெயர். கோணலாக இருப்பதால் அதற்கு அப் பெயர் இடப்பட்டது. தமிழ்ச்சார்புடைய தெலுங்கு மொழியில் 'வங்கி' என்ருல் 'வணங்கி' என்று பொருள். 'வணங்கி' என்னும் சொல்லில் 'ண'வை நீக்கிவிட்டால், நிற்பது 'வங்கியே' எனவே 'Bank'க்கு 'வங்கி' என்னும் சொல் சிறிதும் பொருந்தாது. பாங்கு பொருளார்ந்த சொல். இச் சொல் பல கூட்டுறவு நிறுவனங்களில் பயன்பட்டும் வருகிறது.

Mayor - மேயர் (மேலானவர், 'முதன்மையர்' என்னும் பொருளுடைய சொல்)


இங்ஙன்மாகப் பல பிறமொழிச் சொற்களைத் தமிழில் ஏற்றுக்கொள்வது தமிழை வளப்படுத்துவதாகும். தமிழில் வேர் அமைக்காமலும், தமிழில் பொருள் உண்டாக்காமலும், தமிழ் வடிவமாகத் தமிழ் இலக்கண மரபு கெடாமலும் எத்தனை அயல்மொழிச் சொற்கள் தமிழில் வந்தாலும் தமிழ் கெடாது. தமிழுக்கு இழுக்கு நேராது.

(தொடரும்)

சீர்திருத்தத் தந்தை

பெரியாரின் பெரும் பிரிவு

1973ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 24ஆம் நாள் தமிழக வரலாற்றில், தமிழர் உள்ளங்களைக் கலங்க வைத்து அவர்களைத் துயரக் கடலில் ஆழ்த்திய ஓர் இருள் சூழ்ந்த நாள்!



தமிழ் - தமிழன் - தமிழ்நாடு என்னும் ஒப்பற்ற முப்பற்றினை வளர்த்து, வீழ்ச்சியுற்ற தமிழகத்தை எழுச்சியுறச் செய்ய-தமிழரின் தன்மான உணர்வினைத் தட்டி யெழுப்ப-அவர்தம் சிந்தனையைத் தூண்ட - தமக்குச் 'சரி' எனப்பட்டதைத் துணிவுடன் எடுத்துக் கூறிப் பல எதிர்ப்பு வெள்ளங்களில் அரை நூற்ருண்டுக் காலம் எதிர் நீச்சல் போட்ட - தந்தை பெரியார் என்று தமிழ் மக்களால் அன்போடு அழைக்கப்பட்டு வந்த பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தமிழ்ப் பெருங்குடி மக்களை மாளாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொள்ளச் சென்றுவிட்ட நாள் அந்நாள்!

ஆம்! பெரியார் மறைந்துவிட்டார்! இயற்கையோடு இரண்டறக் கலந்துவிட்டார் - அல்ல - தமிழரின் நெஞ்சங்களிலெல்லாம் நிறைந்துவிட்டார்!

பெரியார் ஒரு விந்தை மனிதர்! அவர் கொள்கை கோட்பாடு, எண்ணம், எழுத்து, பேச்சு முதலியன அனைத்தும் அப்படியே எல்லாராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியன அல்ல. பல கொள்கைகள் கசப்பானவை. பலருக்கு அவற்றைச் சிந்தையில் வாங்கிச் செரிமானம் செய்ய இயலாது. அவரோடு கருத்து வேறுபாடு கொள்வோர் மிகப் பலர். ஆனல், தமிழர் நலம், முன்னேற்றம் ஆகியவற்றைக் குறிக்கோள்களாகக் கொண்டு அவர் ஆற்றிய அரும்பணிகளை எண்ணும்போது, ''வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால் மாளாத அன்பு கொள்ளும் நோயாளி''யைப் போல் தமிழகம் அவரிடம் மாளாத பற்றுக்கொண்டிருந்தது.

'அப்படிப் பெரியார் என்ன செய்தார்?' என்னும் வினவினைச் சிலர் எழுப்பக்கூடும். அப்படிக் கேட்போர், வரலாறு

அறியாதவர்கள் என்றே சொல்லவேண்டும். பெரியார் தோன்றி யிராவிட்டால் - அவர் இத்துணைக்காலம் இங்ஙனம் உழைக்கா திருந்திருந்தால் தமிழர் நிலை என்னுகியிருக்கும் என்பதைச் சற்றே சிந்தித்துப் பார்க்கும் ஆற்றல்படைத்தோர்க்கன்றி மற்றையோர்க்கு அவருடைய பணியின் பயன் தெரியாது - புரியாது!

அரசியலில், விடுதலைப் போராட்ட வீரராகத் தம் பொது வாழ்வினைத் தொடங்கிய பெரியார், இந் நாட்டில் அந் நாளில் நிலவிய ஆரிய ஆதிக்கத்தையும், அதனுல் விளைந்த கேடுகளை யுங் கண்டு கொதித்தெழுந்து முதலில் அவற்றைக் களைவது தான் தமது கடன் எனக்கொண்டு, நாட்டுப்பற்றைவிட மனிதப் பற்று - தன்மானப்பற்று - தன் இனப்பற்று-தன் மொழிப்பற்று இவைதாம் முதன்மையானவை என்ற முடிவுக்கு வந்தார். அதன் விளைவுதான் அவர் ‘சுயமரியாதை இயக்கம்’ தோற்று வித்ததும் ஆரிய மாயையை எதிர்த்துப் போராடியதுமாகும்.

1938ஆம் ஆண்டில் தமிழகத்தில் அன்பர் ஆச்சாரியார் ஆட்சியில் கட்டாய இந்தி நுழைந்த முறையும், அதனைப் பெரியார் தலைமையில் தமிழகம் எதிர்த்து நின்று போராடிய மாண்பும் ஈண்டு நினைவுகூரத்தக்கவை. அப்போது தோன்றிய தமிழ் உணர்வுதான் - இனப்பற்றுதான் இன்று மாற்ருரால் வெட்டி வீழ்த்த முடியாத வேரோடிய ஆலமரமாக - காலந் தோறும் விழுதுவிடும் அரசியல் கருவூலமாக வளர்ந்து வந்துள்ளது.

1938இல் இந்தி எதிர்ப்பினை அடிப்படையாக வைத்துத் தமிழ்ப் பெரும் புலவர்களான மறைத்திரு மறைமலையடிகள் சோமசுந்தர பாரதியார் ஆகியோர் பெரியாருடன் ஒருங்கிணைந்து கருத்துவேறுபாடுகளைக் களைந்து ஒரே அணியில் திரண்டு நின்றனர். எங்கும் தமிழ் உணர்வு - தன்மான உணர்வு - ஆரிய எதிர்ப்பு உணர்வு என்ற நிலை தோன்றலாயிற்று. தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! என்று அன்று எழுப்பப்பட்ட ஒலி இன்றும் நீறு பூத்த நெருப்பாக இருந்துகொண்டிருக்கிறது.

அன்று பெரியார் இத்தகைய போராட்டத்தில் ஈடுபடா திருந்தால் இன்று எங்கும் எதிலும் இந்தி என்ற நிலையும் அது காரணமாகத் தமிழர் இந்திய அரசியலில் இரண்டாந்தரக் குடிமக் களாகவும் இருக்க வேண்டிய நிலைதான் ஏற்பட்டிருக்கும்.

சாதி - சமய வேறுபாடுகள் கூடா - தமிழன் என்ற ஓர் உணர்வுதான் வேண்டும் என்று முழங்கிய பெரியார் அவர்களை ஆரியப் பார்ப்பனர்களும் அவர்தம் ஏடுகளும் ‘நாயக்கர்’ என்றே பேசியும் எழுதியும் வந்தன. இந் நிலையினை மாற்றக் கருதியே

1938ஆம் ஆண்டில் சென்னையில் மறைமலையடிகளாரின் திருமகளாரும் திருவரங்கனாரின் துணைவியாருமான திருவாட்டி நீலாம்பிகை அம்மையார் அவர்கள் தலைமையில் கூடிய மகளிர் மாநாட்டில் திரு. ஈ. வெ. ரா. அவர்கட்குப் 'பெரியார்' என்ற பெயர் சூட்டப் பெற்றது.

அன்றுமுதல் அவர் செயற்கரிய செய்த பெரியாராகத் திகழ்ந்து, தமது 95ஆம் அகவையில் பேரா இயற்கை எய்தி விட்டார். அரை நூற்றாண்டுக் காலம் அவர் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்கா. இராமலிங்க அடிகளார் கூறியபடி "கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடிப் பழக்கங்களை" அவர் கண்டித்தார். சாதி சமய உயர்வு தாழ்வுகளைச் சாடினார். சீர்திருத்தம் அவர் உயிர் மூச்சாக இருந்தது. அதற்காக இறுதி மூச்சு உள்ளவரை உழைத்து, இறுதிக் காலத்தில் அதற்கென ஒரு போராட்டத் திட்டத்தைக்கூட வகுத்து வைத்துவிட்டுத்தான் மறைந்தார்.

அவர் பணிச் சிறப்புகளை யெல்லாம் எழுதுவதென்றால் இவ் வேடு இடந்தராது. அவை அத்துணைச் சிறப்புப் பொருந்தியவை - அரியவை - பெரியவை!

எனவேதான் சீர்திருத்தத் தந்தை பெரியாரின் பெரும் பணிகளை மிகச் சிறந்த முறையில் பெரிய அளவில் ஒரு தனி நூலாக வடித்துத்தர முடிவு செய்துள்ளோம். அதற்கான வேலைகள் விரைந்து நடைபெறுகின்றன. அந் நூல் ஏற்றமும் எழிலுமிக்கதொரு நூலாக நம் கழகவழி விரைவில் வெளியிடப் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தமிழினத் தலைவர் மறைந்துவிட்டார்! சுயமரியாதைச் சூறாவளி அடங்கிவிட்டது! பகுத்தறிவுப் பகலவன் மறைந்து விட்டான். ஆனால், இவை அனைத்தும் வெவ்வேறு உருவிலே நாட்டில் நடமாடி நம் நெஞ்சங்களிலெல்லாம் நிறைந்திருக்கின்றன. இயன்ற வரையில் அவர் கொள்கைகளைக் கடைப் பிடித்துத் தமிழும் தமிழரும் வாழ நம்மால் இயன்றதை யெல்லாம் செய்வதே அவருக்கு நாம் காட்டும் நன்றி உணர்வாகும்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், பெரியார் ஆற்றிய பெரும் பணிகளுள் ஒன்று அவர் எதையும் சிந்திக்க வைத்ததே. எனவே சிந்திப்போம்! செயல்படுவோம்.

வாழ்க பெரியார் திருப்பெயர்!

வாழ்க தமிழ்!!

வெல்க தமிழினம்!!!

இரங்கல் உரைகள்

தந்தை பெரியார் அவர்களின் மறைவு குறித்து இந்திய துணைக் கண்டத்தின் அரசியல் தலைவர்களும், பெருமக்களும் விடுத்துள்ள இரங்கல் செய்திகள் மிகப்பல. விரிவஞ்சி அவற்றின் சுருக்கங்களை மட்டுமே ஈண்டுத் தொகுத்துத் தந்துள்ளோம்.

போராட்ட வீரர்

பெரியார் இராமசாமி எதிலும் முனைப்பாற்றல் மிக்கவராகவும், வாழ்நாள் முழுவதும் ஒரு போராட்ட வீரராகவும் வாழ்ந்தவர்.

—இந்தியக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி

கருத்துப் போராட்டங்களில் திளைத்தவர்

கருத்து வேறுபாடுகளுக்குரிய பூசல்களில் ஈடுபட்டுத் திளைத்தவர். சமுதாயம் ஏற்றுக்கொண்ட கருத்துகளையும் எதிர்த்து அறைகூவி நின்றவர் பெரியார்.

—இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி

தீவிர மாற்றத்தை விழைந்த வீரர்

இந்து சமுதாயத்தில் தீவிர மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்று தம் வாழ்நாளெல்லாம் போராடிய மாபெரும் புரட்சியாளர் பெரியார்.

—இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜகஜீவன்ராம்

உலகம் ஒரு சிந்தனையாளனை இழந்துவிட்டது

சுயமரியாதைச் சுடரொளி - இந்தி எதிர்ப்பின் சின்னம் - ஆதிக்க புரியின் பகைவர் - மூடநம்பிக்கையின் வைரி பெரியார். அவர் மறைவு தமிழகத்திற்கு நிறைவு செய்ய முடியாத இழப்பு. உலகம் ஒரு சிந்தனையாளனை இழந்துவிட்டது.

—தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர்

பகுத்தறிவுச் சிங்கம் சாய்ந்துவிட்டது

எதற்கும் அஞ்சாமல், யாருக்கும் அஞ்சாமல் தமிழ்நாட்டில் வெற்றி உலா வந்த பகுத்தறிவுச் சிங்கம் சாய்ந்துவிட்டது.

—கல்வி அமைச்சர், டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன்

தமிழகத்தின் விடிவெள்ளி

இன்றைய தமிழகத்தின் விடிவெள்ளியாய் - நாமும் நாடும் பெற்ற மறுவாழ்வின் மூலவித்தாய் - இந் நாட்டு வரலாற்றில் எந் நாளும் இடம் பெற்ற வியத்தகு வீரராய் விளங்கி நிற்பவர் நம் தலைவர் பெரியார் அவர்களாவர்.

—அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்

தாழ்த்தப்பட்டோர்க்குத் தன்மான உணர்வூட்டியவர்

தாழ்த்தப்பட்ட சமூகத்தினர்க்கு விழிப்புணர்ச்சியும், தன்மான விடுதலை உணர்வும் முதன் முதலில் உருவாக்கியவர் பெரியார்.

—அமைச்சர் சத்தியவாணி முத்து

பொது வாழ்வுக்கு நட்டம்

பெரியாரது மறைவு பொது வாழ்வுக்கு மகத்தான நட்டமாகும்.

—ப. காங்கிரஸ் தலைவர் காமராசர்

ஐயோ! இது மெய்யா?

அரை நூற்றாண்டுக் காலம் தெளிவோடும் துணிவோடும் எழுதி எழுதித் தன்மான உணர்ச்சி யூட்டிய அறிவுக் கருவூலம் தீர்ந்து விட்டது — கொடுமை கண்டு கொதித்தெழும் எரிமலை ஓய்ந்து விட்டது — பகுத்தறிவுப் பகலவன் — சுயமரியாதைச் சூறாவளி — புரட்சிப்புயல்—பண்பாட்டின் பெருமலை—தந்தை பெரியார் அமைதியில் ஆழ்ந்து விட்டது மெய்யா?

—துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு

வரலாற்றில் இடம் பெற்றுவிட்டார்

பெரியார், உலகில் தோன்றிய சமுதாய சீர் திருத்தப் புரட்சியாளர்களுள் தலைசிறந்தவராகத் திகழ்ந்தார். தமக்கெனப் புதிய புரட்சிகரமான வரலாறு படைத்து உலக வரலாற்று நாயகர்கள் வரிசையிலேயே சிறப்பிடம் பெற்றுவிட்டார்.

—சிலம்புச் செல்வர் ம. பொ. சி.

யாருக்கும் பகைவர் அல்லர்

பிராமண சமூகம் உயர் நன்மையைத் தனது பிறப்புரிமையாக ஆக்கிக் கொண்டதைப் பெரியார் தமது இதய பூர்வமாக எதிர்த்தார். ஆனால் தமது தனி வாழ்வின் நடைமுறைகளில் யார்மீதும் அவருக்குப் பகை உணர்வு இருந்ததில்லை.

—இ. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பி. இராமமூர்த்தி

ஆசிரியர்களுக் கெல்லாம் ஆசிரியர்

பகுத்தறிவுப் பல்கலைக் கழகம் சாய்ந்துவிட்டது. அனைத்துலக ஆசிரியர்கட் கெல்லாம் ஆசிரியராக விளங்கிய பெருந் தலைவரின் மறைவு நாட்டில் பேரிழப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

—பேராசிரியர் க. அறிவழகன்

மனசாட்சியைத் தட்டி எழுப்பியவர்

பெரியார் ஊமையராய் இருந்த பன்னூறுயிரம் மக்களின் மனச்சான்றைத் தமது புரட்சிகரச் சிந்தனைகள் மூலம் தட்டி எழுப்பினர்.

—ஆந்திர முதல்வர் வெங்கல் ராவ்

இரங்கற் பாக்கள்

இணையற்ற வரலாறு

சாய்ந்ததுவோ பகுத்தறிவு வீரச் சிங்கம்!
சரிந்ததுவோ தன்மான உணர்ச்சி வெற்பு!
மறைந்ததுவோ வெண்தாடி வேந்தன் கொற்றம்!
ஓய்ந்ததுவோ சமநீதி ஒலி பெருக்கி
உடைந்ததுவோ தமிழினத்தின் காவல் கோட்டை
காய்ந்ததுவோ பேரன்புக் கடலே! மக்கள்
கண்களிலே துயர் அருவி காய்வதெந்நாள்?

"அவன் சொன்னான் இவன் சொன்னான் எனச்சொல்லாதே!
அறிவுக்குப் பொருந்தாத கருத்தை நாட்டில்
எவன்சொன்ன போதிலுமே எதிர்க்க வேண்டும்"
எனச்சொன்ன தனித்தலைவர் பெரியா ரன்றோ?
துவளாத கொள்கையுடன் தளரா உள்ளம்
தொண்ணூற்றி ஐந்தாண்டுக் காலம் வென்றார்
எவருக்கும் அஞ்சாத பெரியார் பாதை
இணையற்ற வரலாறு படைத்த தம்மா!

—கவிஞர் புத்தனேரி, சுப்பிரமணியம்.

தமிழின வேலியானீர்!

'தாய்ப்பாலாம் தமிழ்ப்பா லுக்குள்
தறுதலைக் கள்ளிப் பாலா?
பேய்மொழி இந்தி வந்து
பிணைவதா?' என்றே கேட்டுத்
தூயதோர் மொழிப் போராட்டம்
தொடர்ந்திங்கே நடத்திக் காட்டி
தாய்மொழி காத்து நின்றீர்!
தலைமுறை மறப்ப துண்டோ?

தன்னாட்சித் தாய கத்தில்
தமிழினம் உரிமை யோடு
பொன்னாட்சி காண்ப தற்குப்
பொழுதெலாம் உழைத்தே வந்தீர்!
கன்னல்நேர் அண்ணா ஆட்சி
கலைஞரால் நடாத்து தற்கு
என்றென்றும் 'வேலி' யானீர்
ஏந்தலே எங்கே சென்றீர்?

—கா. வேழவேந்தன், பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ.

கோவை அறிவியல் கோவேந்தர்


[பாவலன் வி. ப. கா. சொல்லழகன்
தமிழ்நாடு இறையியற் கல்லூரி, மதுரை]

கோவை அறிவியல் கோவேந்தர் ஆதலால்
கோபால் துரைசாமி எனும்பேர் இட்டாரோ?
கோவை அறிவியல் கோமலக் கொடுமுடி;
கோவை கோவையாய் அறிவியல் புதுமைகள்
கோத்த வேந்தர் 'கோ-துரை என்பமே.
ஆயிரத்தில் இவர் ஒருவரா? அல்லர்;
பத்தா யிரத்தில் ஒருவரா? அல்லர்;
நூறு யிரத்தில் ஒருவரா? அல்லர்;
ஆயிரம் ஆண்டுக் கோர்முறை இத்தகு
ஆய்வுரை நேயரைத் தாயகம் காணுமோ?
பொறிபல கண்டவர் - புதுமை வடிவினர்—
நெறிநலம் விண்டவர் - நேர்மையே கொண்டவர்;
உழைப்பே உயிரென உடலென நிறுவி
உழைப்பால் உயரவே உழைத்துக் காட்டியே
உழைப்பை அழைத்தே உழைக்க உரைத்தவர்;
உலகின் அறிவியல் மன்றத் துறுப்பினர்;
நலமிகு அறநிலை நாட்டியே காட்டினர்;
எளியவர்க் காகவே எளியநல் விலையிலே
ஒளிமிகு பொறிபல புதுவகை கண்டவர்;
சுவைமிகு உருமிகு தரமிகு புதுப்புது
அரும் அரும் பழவகை பலப்பல படைத்தவர்
விரைவினில் பலன்தரும் விரைபல படைத்தவர்
வளமுற உழவியல் வழிபல வகுத்தவர்
எளியவர் குடிகொள மலிவகம் படைத்தவர்;
வானொலிப் பெட்டியும் வகைப்புதுச் செடிகளும்
தம்மைப் படைத்தவன் உம்மை யடையவே
நினைந்த நினைந்து வருந்தல் ஆயினே;
நுண்மாண் நுழைபுல நோக்கினர், கோ. துரை
விண்மா விழைபுலம் நோக்கிடச் சென்றனர்.

———

அதிசய மனிதர் ஜி. டி. நாயுடு அவர்களின் பேரா இயற்கை

அமெரிக்க நாட்டின் அறிவியல் பேரறிஞர்களாக விளங்கிய எடிசன், போர்டு, பர்பாங் ஆகிய மூவர் திறமையினையும் ஒருங்கே பெற்று, அறிவுத்துறையில் நுட்பங்கள் பல கண்டு நாட்டை மேம்படுத்தி வந்த தொழில் நுட்பமேதை ஜி. டி. நாயுடு அவர்கள் 4-1-1974 காலை 9-40 மணி அளவில் தமது 80ஆவது அகவையில் இயற்கை எய்திய செய்தி அறிந்து மிகவும் துணுக்குற்றோம். அவர் கடந்த சில நாட்களாக உடல் நலங்குன்றித் தமது இல்லத்திலேயே மருத்துவம் பெற்று வந்தார். இவருக்கு துணைவியாரும், இரு புதல்விகளும், ஒரு மகனும் உள்ளனர். தமிழ்நாட்டுக்கு இத் தவப்புதல்வரின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.



3-1-74ல் மதுரையில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகத் தமிழகம் வந்திருந்த குடியரசுத் தலைவர் வி. வி. கிரி, அவர்கள் ஜி. டி. நாயுடுவைச் சந்தித்து உடல் நலம் உசாவிச் சென்றது குறிப்பிடத் தக்கது. தந்தை பெரியாரின் நெருங்கிய நண்பரான இவர் பெரியார் பேரா இயற்கை எய்திய சில நாட்களில் பிரிவுற்றமை மிகவும் வருந்துதற்குரியது. அவருடைய உற்றார் உறவினர்களுக்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இவருடைய வரலாற்றுச் சுருக்கம் 1968 செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 42 இல் வெளியிடப் பெற்றுள்ளது. தனி நூலாக இவர்தம் வரலாற்றைப் படங்களுடன் வெளியிடத் திட்டமிட்டு வருகின்றோம்.


சென்னை, தமிழ் இசைச் சங்கம் பண்ணாராய்ச்சியின் 24ஆம் கூட்டம்

இக் கூட்டம் முறையே திசம்பர் 22, 23, 24 ஆம் நாட்களில் நடைபெற்றது. திரு. தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை வரவேற்புரை நிகழ்த்த, உயர் நீதிமன்ற நடுவர் திரு. என், கிருட்டிணசாமி ரெட்டியார் தொடக்கவுரை ஆற்ற, திருவாட்டி D. K. பட்டம்மாள் தலைமையுரை நிகழ்த்த பண்ணாராய்ச்சி நடைபெற்றது.

தேவார இசையரங்கும், திருப்புகழ் இசையரங்கும் நடைபெற்றன. 24—12—73இல் இராவ்சாகிப் திரு. கு. கோதண்டபாணிப் பிள்ளையவர்கள், 'முல்லைத் தீம்பாணி' என்னும் பொருள் பற்றிய கட்டுரையினைப் படிக்கப் பேராசிரியர் டாக்டர் எஸ். இராமநாதன் அவர்கள் அதனைப் பாடிக் காட்டியது குறிப்பிடத்தக்கது.

திரு. பி. எம். பொன்னுசாமி முதலியார் மறைவு

சென்னை 'ஜெய்ஹிந்த் டைப் பவுண்டரி' உரிமையாளரான திரு பி. எம். பொன்னுசாமி முதலியார் அவர்கள், தம்முடைய 73ஆம் அகவையில் 1—1—'74 அன்று இறையடி சேர்ந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்கள் பாரிப்பாக்கத்தைச் சேர்ந்த முதலியார் மரபினர். தம்முடைய தந்தையார் திரு. பி. முனுசாமி முதலியார் அவர்கள் 1885 ஆம் ஆண்டில் தொடங்கிய இவ் அச்சு வார்ப்பு நிலையத்தில் தந்தையாருடன் தொழில் புரிந்து, பின்னர் 1942ஆம் ஆண்டில் தந்தையார் மறைந்தபின் தாமே முழுப் பொறுப்பேற்று இறுதிக் காலம் வரை செவ்வனே தொழில் புரிந்தார். இவர்கள் சிறந்த சிவநெறியாளர். எப்போதும் அமைதியாயிருப்பதோடு எவரிடமும் அன்பாகப் பழகுவார். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திடம் நீங்காப் பற்றுக் கொண்டவர். கழக நூல்கள் செவ்வனே வெளி வருவதற்கு அழகிய எழுத்துக்களைக் குறுகிய காலத்தில் வடித்துக் கொடுத்தார். அவர்களுடைய அடிச்சுவட்டில் அவர்தம் மூத்தமகனாகிய திரு ஈசுவரமூர்த்தி அவர்களும் மருகர் திரு. க. சந்தானம் அவர்களும் அவ்வச்சு வார்ப்புத் தொழிலை மேலும் சிறப்புறப் புரிந்து நாட்டிற்கு நற்றொண்டாற்ற இறைவனை வேண்டுவதுடன் திரு முதலியாரவர்கள் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



திரு. முதலியாரவர்கள் திருநாவுக்கரசர் பக்த சன சபையின் காவலராக இருந்து திருத்தணி முருகர் திருக்கோவிலில் கந்தர் சட்டிக் கவசத்தினை வெள்ளைக் கல்லில் பதிப்பிக்கச் செய்தது நாம் எல்லோரும் அறிந்து இன்புறுதற்குரியது.

செய்திகளும் குறிப்புகளும்

கட்டபொம்மன் கோட்டை அடிக்கல் நாட்டுவிழாவும் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத் தொடக்கவிழாவும்

வெள்ளையர் ஆதிக்கத்தை முதன்முதல் எதிர்த்த வீரன் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடமாகிய பஞ்சாலங் குறிச்சியில் 4-1-1974ல் கட்டபொம்மன் கோட்டை அடிக்கல் நாட்டு விழாவும் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத் தொடக்க விழாவும் அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் தலைமையில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் துவக்கிவைத்தார்கள். கட்டபொம்மன் கட்டிய கோட்டை சிதைந்த நிலையில் உள்ளது. கோட்டை ஒன்றை எழுப்பி அதைச்சுற்றித் தோட்டம் துரவுகள் அமைக்கப்படும். நினைவுச் சின்னங்கள் நிறுவப்படும். அதில் கட்டபொம்மன் கொலு மண்டபம் இருக்கும். அதில் அரியணையில் கட்டபொம்மன் வீற்றிருக்க அவன் அருகில் தம்பி ஊமைத்துரை, தளபதி வெள்ளைத்தேவன், அமைச்சர் தானுபதிப்பிள்ளை முதலியவர்கள் வீற்றிருக்கும் காட்சி அமைக்கப்படும். ஜூலை 15ஆம் நாள் அக்கோட்டை திறக்கப்படும் என்றும், அப்பொழுது (இப்போது உடல் நலக்குறைவால் வர இயலாமல் இருக்கின்ற) சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களும், டாக்டர் கலைஞர் அவர்களும் கலந்து கொள்வார்கள் என்றும் தலைவரவர்கள் குறிப்பிட்டார்கள். பாஞ்சாலங் குறிச்சிப் பகுதியில் நூல்ஆலை, சிறுதொழில் ஆலை நிறுவப்படும். ஓட்டப்பிடார மக்களின் ஒப்புதலுடன் பாஞ்சாலங்குறிச்சி (தாலுகா) வட்டமாக மாற்றப்படும். வீரபாண்டிய கட்டபொம்மன் பரம்பரையினருக்கு நிலப்பட்டாக்களும், மனைப்பட்டாக்களும், கறவைமாடுகள் வாங்குவதற்கான பணமும், கிணறு வெட்டுவதற்குத் தேவையான கல்லுடைக்கும் இயந்திரங்களும் முதல்வர் கலைஞர் வழங்கினர்.

நான்காம் உலகத் தமிழ் மாநாடு, இலங்கை

1974 சனவரித் திங்கள் 3ஆம் நாள் முதல் 9ஆம் நாள்வரை இலங்கை, யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதனை அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக்கிளை நடத்துகின்றது. இதில் 15 நாடுகளிலிருந்து 150 பேராளர்கள் கலந்து கொள்கின்றனர். தமிழ் நாட்டிலிருந்து 40 பேராளர்கள் வரை சென்றுள்ளனர்.

இம் மாநாட்டைத் தொடக்கிவைத்த டாக்டர் தனிநாயக அடிகள் 'ஆராய்ச்சியாளர்கள் பழமையிலும் தொன்மைக் காலத்திலும் இருந்தவற்றையே ஆய்ந்து கொண்டிருக்கக் கூடாது. தற்காலத்தைப் பற்றியும் இன்றைய சமுதாயத்தைப் பற்றியும் நிறைய ஆய்வுகள் நடத்த வேண்டு'மென்று கூறினர்.

மாநாட்டிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசிய பேராசிரியர் சு. வித்தியானந்தம் அவர்கள் உலக முழுவதும் தமிழைப் பரப்பப் பல வகையான முயற்சிகளை யெடுத்துக் கொள்ள வேண்டுமென்றார்.

மாநாட்டில் கலந்துகொள்ளும் வெளிநாட்டு அறிஞர்களில் லண்டன் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த டாக்டர் ஜான் மார், மேற்கு செர்மனி பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பேராசிரியர் ஜனேர்ட், பிரிட்டிசு கொலம்பியா பல்கலைக் கழகத்தைச் சார்ந்த டாக்டர் பிரெண்டா பர்க் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பற்றிய முழு விளக்கம் அடுத்த இதழில் இடம் பெறும்.

புதிய வால்மீன் தோற்றம்

வானில் மின்னும் வண்ணப் பூச்சிகள் விண்மீன்கள் இவற்றில் மாறுபட்டதொன்று வால்மீன் எக்காலத்திலும் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. ஏதோ ஒரு காலத்தில், ஒரு நூற்றாண்டுக்கு ஒருமுறை கண்ணுக்குப் புலப்படும். வானத்தில் பல வால்மீன்கள் உண்டு. கண்ணுக்குப் புலப்படுவது ஏதோ ஒன்றுதான்.

இந்த நூற்றாண்டில் குறிப்பிடத்தக்க வால்மீன் இப்பொழுது வானத்தில் தோற்றமளிக்கிறது. இதைக் கண்டு பிடித்தவர் மேற்கு செர்மனியிலுள்ள ஆம்பர்க் விண்வெளி ஆய்வுக் கூடத்தில் பணியாற்றும் லுபோ கஹூடெக் (Lubos Kohoutek). கடந்த மார்ச்சுத் திங்கள் ஏழாம் நாள் அவர் வானத்திலுள்ள பல மீன்களைப் பிடித்துக் கொண்டிருந்த போது திடுமெனப் புதிய மீன் காட்சியளிப்பதைப் படம் பிடித்தார். வானில் 650 மில்லியன் கி. மீ. தொலைவில் அது இருந்தது. அது வால்மீனாக இருக்கலாமென உலகின் பல்வேறு வானியல் அறிஞர்களுக்குத் தெரிவித்தார். வால்மீன் சூரியனுக்கு மிக அருகில் வரும் பொழுதுதான் அது நன்கு ஒளிவீசும். அவர் கண்டு பிடித்ததனால் அதற்கு அவர் பெயரையே சூட்டிக் 'கஹூடெக் வால்மீன்' என்று அழைக்கின்றனர்.

இதற்கு முன் எட்மண்ட் ஆலி (Edmund Hally) 1682 இல் தோன்றிய வால்மீனைப் பற்றி ஆய்ந்து 1758இல் அது மீண்டும் தோன்றும் என்று கூறினர். அவர் கூறியது போலவே 1758 திசம்பரில் அது தோன்றியது. அதிலிருந்து அதற்கு ஆலி வால்மீன் என்று பெயரிட்டுள்ளனர். அஃது 76 ஆண்டுகட்கு ஒரு முறை தோன்றும் என்று கூறினர் அவ்வாறே 1835, 1910 ஆம் ஆண்டுகளில் தோன்றியது. மீண்டும் 1986இல் தோன்ற வேண்டும்.

இதற்கிடையில் இப் புதிய வால்மீன் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது முழுநிலவில் ஐந்தில் ஒரு பங்கு அளவு தோன்றும் ஆலி வால்மீனை விட நன்கு ஒளிரும். வானில் ஆறில் ஒரு பங்கு பகுதியில் வளைவாகத் தோன்றும் இவ் வால்மீனின் தலைப்பகுதி 15,000 கி.மீ. நீளர் குறுக்களவு உடையது. வாலின் நீளம் மில்லியன்கள் கி, மீ. அளவில் நீளும்.

ஒவ்வோர் இரவும் அது பெருகித் தோன்றும். அடிவானத்தின் தென் மேற்குப் பகுதியில் இதைக் காணலாம். அது 120 மில்லியன் கி. மீ. தொலைவுக்கு அப்பாலிருப்பதால் நமக்கு நிலையாக இருப்பது போல் தோன்றும். ஆனல் உண்மையில் மணிக்கு 15,000 கி. மீ. வேகத்தில் அது சுழன்ற கொண்டிருக்கிறது.

இவ் வால்மீன் பூமியுடன் மோதுவதில்லை. ஆனல் மோதினல் என்ன ஆகும்? பூமியில் ஒரு பக்கம் சிறிது உரசினல் லண்டன் மாநகரத்

தைப் போன்ற பெரிய நகரமே தூளாகிவிடும். இம் மாதம் இடையில் காலையிலும் மாலையிலும் இது நன்றாகத் தெரியும். மாத இறுதியில் ஞாயிற்றைவிட்டு விலகிச் சென்று கண்ணுக்குப் புலப்படாது மறைந்து விடும்.

தமிழிசை முப்பத்தொன்றும் விழா

தமிழிசைச் சங்கத்தின் 31ஆம் விழா 21—12—73இல் இராசா அண்ணாமலை மன்றத்தில் திருவாட்டி இசைப் பேரறிஞர் பட்டம் பெற்ற D. K. பட்டம்மாள் அவர்கள் தலைமையில் சீருஞ் சிறப்புமாக நடைபெற்றது. உயர்நீதிமன்ற நடுவர் மாண்புமிகு பி. ஆர். கோகுல கிருட்டிணன் அவர்கள் விழாவைத் துவக்கி வைத்து அரியதோர் உரை யாற்றினார். அவ்வுரைச் சுருக்கம் வருமாறு:

"தமிழ் ஆர்வத்தினை வளர்க்கப் பாடுபட்ட மறைமலை யடிகள், பரிதிமாற் கலைஞர், திரு. வி. க., டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், இன்னும் இவர் போன்ற சிலரையும் நாம் மறக்க முடியாது. இவர்களால் தூவப்பெற்ற தமிழார்வ மென்னும் விதையினை இசைநீர் ஊற்றித் தமிழிசை இயக்கத்தை வளர்த்த இராசா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களை, இலக்கிய நீர் ஊற்றி, இயற்றமிழில் யாவரும் பேசும் பழக்கத்தைத் தூண்டிய பேரறிஞர் அண்ணா அவர்களை, நாடகத் தமிழ்நீர் ஊற்றி நல்ல தமிழினை மேடையில் முழங்கச் செய்த ஔவை தி. க. சண்முகத்தை மறக்கும் தமிழர்கள் நன்றி கொன்றவர்கள் ஆவார்கள்.

அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் ஆர்வம் மட்டும் நமக்குக் கிடைக்காமல் இருந்திருந்தால் ஏழிசையாய் இசைப்பயனாய் இறைவன் வாழ்ந்த தமிழிசையை இவ்வளவு ஏற்றத்தில் நாம் பெற்றிருக்க முடியாது.

எல்லா மொழிகளிலும் இயலும் இசையும் நாடகமும் உண்டு. ஆனால் இவற்றோடு மொழியின் பெயரைச் சேர்த்து இயற்றமிழ்-இசைத் தமிழ்-நாடகத் தமிழ் என்று பகுக்கப்பட்ட பகுப்பு தமிழ் ஒன்றிலேயே காணப்படுகின்றது.

பண்டைத் தமிழகத்தில் இசையின் ஏற்றத்தைக் கடற்கரைப் பகுதியில் பாடப்பெற்ற கானல்வரி, பாலை நிலத்தில் பாடப் பெற்ற வேட்டுவ வரி, பேரூர்களில் அம்மானை ஆடிக்கொண்டே பாடப் பெற்ற அம்மானை வரி, பந்தாடிக்கொண்டே பாடப்பெற்ற கந்துகவரி, உலக்கையால் தானியங்களைக் குத்திக்கொண்டே பாடப் பெற்ற வள்ளைப்பாட்டு. மலை நிலத்தில் ஆடிக்கொண்டே பாடப்பெற்ற குன்றக்குரவை, ஆயர்கள் பாடிய ஆய்ச்சியர்குரவை ஆகியன நமக்கு உணர்த்துகின்றன. தமிழிலே இசை ஏது என்போர்க்குத் தமிழிசை வளர்ந்திருந்த வரலாற்றினை ஏராளமாக நாம் காட்ட முடியும்.

மறைஓதி மூடப்பட்ட கதவினைத் தமிழ் இசை ஓதித் திறந்தோம் என ஏட்டிலே படித்தோமேயன்றி நாட்டிலே தமிழிசையினை மறந்தோம். அதனால் இசைப்பட வாழ்ந்த தமிழினம் இடைக் காலத்தில் தனது தனித் தன்மையை இழந்தது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப் போல் சேரன் கொலு மண்டபத்திலே 'வாதாபி கணபதி' பாடப்பெற வில்லை.

பாண்டியன் ஆட்சியில் 'பலுகவே ஏமிரா' பாடப்பட வில்லை. அந் நாளில் இசையே இல்லையா? உண்டு; தமிழிசை பாடப்பட்டது.

நாவுக்கரசர் தேவாரத்தினை, ஞானசம்பந்தர் பாக்களை, சுந்தரர் துதிப் பாடல்களை மாணிக்க வாசகரின் இசையினை ஏன் மறந்தோம்? இவ்வளவு இசைக் கருவூலங்களும் ஏன் நடைமுறையில் இல்லை? இவற்றுக் கெல்லாம் செட்டி நாட்டரசர் காலத்தில் தானே விடை யளிக்கப்பட்டது. எனவே, செட்டி நாட்டரசர் குடும்பத்தினரை வாழ்த்தாமல் இருக்க முடியாது.

இன்று நாட்டில் நல்ல தமிழ் உணர்ச்சியும் தமிழறிவும் வளர்ந்து வரும் நிலையினைக் காணுகிறோம். இதனை வெறுப்போர்—வேதனைபடு வோர்—நையாண்டி செய்வோர் ஆகியவர்களைப்பற்றி நாம் கவலையுற வேண்டியதில்லை. தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்திடப் புறப்படுவோம்''

திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கட்குப் பாராட்டு

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் சைவமும் தமிழும் தமிழினமும் தழைக்கத் தமிழக மெங்கும், தமிழர்கள் வாழும் பிற மாநிலங்களிலும் அயராது தொண்டு புரிந்து வருகின்றனர். திருக் கோயில்கள் பலவற்றின் திருப்பணிகள் முற்றுவிக்கும் பணியினையும், ஏழை மாணவரின் கல்விக்கு உதவுதலையும், சமயச் சொற்பொழிவுகள் செய்தலையும் தம்முடைய கடமைகளாகக் கொண்டுள்ள இச்சமயப் பெரியாருக்குத் தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் 1—1—'74இல் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் மீனாட்சி சுந்தரேசுரர் திருமண மண்டபத்தில் ஒரு பாராட்டு விழா நடை பெற்றது. வாழ்க வாரியாரவர்கள் சமயத் தொண்டு!

தொல்காப்பியக் கலைக் களஞ்சியம்

ஒரு வேண்டுகோள்

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்தின் சொற்பொருள் அடைவு, தொல்காப்பிய நூற்றொகை, கட்டுரைப் பட்டியல் அடங்கிய 'தொல்காப்பியக் கலைக்களஞ்சியம்' உருவாகி வருகிறது. செந்தமிழ்ச் செல்வி, தென்மொழி, செந்தமிழ், தமிழ்ப் பொழில் முதலிய தமிழ் இதழ்களிலும் பல்வேறு மலர்களிலும் வெளிவந்துள்ள தொல்காப்பியத் தைப் பற்றிய கட்டுரைகள் தொகுக்கப் பெற்றுள்ளன. இவ்விதழ் களன்றி வேறு இதழ்களிலோ அல்லது மலர்களிலோ தொல்காப்பியம் பற்றிய கட்டுரைகள் காணப்படின் உடனே பின்வரும் முகவரிக்கு விவரக் குறிப்பை அனுப்பி வைக்க வேண்டுகிறோம். முடிந்தால் கட்டுரைப் படியை அனுப்பி வைக்கலாம்.

திரு. க. ப. அறவாணன்,
தமிழ்க்கோட்டம், 60, முனிரத்தினம் தெரு,
அய்யாவு நாயுடு குடியிருப்பு, சென்னை-600 029.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

கழகப் புதிய வெளியீடுகள்

அம்புலிப் பயணம்

—டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், எம்.ஏ., பி.எசி.,பி.டி.

நிலவுலகினின்று நிலா உலகிற்குப் பயணம் செய்யும் முயற்சியில் பன்னெடுங் காலமாக ஈடுபட்டு வரும் மனிதனின் முயற்சி வெற்றிபெற்ற காலம் இது. இத்துறையில் அமெரிக்க, உருசிய விண்வெளி வீரர்கள் பெற்றுள்ள வெற்றிகளையும் 17 அப்போலோ பயணங்கள் பற்றியும் விளக்கமாகச் சிறுவர்க்கும் பயன்படும் வகையில்-படங்களுடன் வெளிவந்துள்ள அழகிய பதிப்பு. விலை 4-00

காட்டு வளம்—*உ. அஞ்சனமழகிய பிள்ளை, பி.எசி (வேளா.)*

காட்டு வளத்தின் இன்றியமையாமை, காட்டு வளத்தைப் பெருக்குவது எப்படி, காடுகளையும் காட்டு விலங்குகளையும் பாதுகாத்தலின் இன்றியமையாமை, காடுதரும் பொருள்கள் இன்னபிற செய்திகள் இந்நூலின்கண் விளக்கப்பட்டுள்ளன. கல்லூரிகளிலும் பொது நூலகங்களிலும் இருக்க வேண்டிய நூல். விலை 8-75

திருவருட்பாப் புகழ்த்திரட்டு

—வள்ளலார் இராமலிங்க அடிகள்

இது திருக்குறள் தெளிவுரையைப்போல் கையடக்கமான தொரு பதிப்பு. இதன்கண் திருவருட்பாவினின்று 'திருவடிப் புகழ்ச்சி' 'மகாதேவமாலை' 'அருட்பெருஞ் சோதி அகவல்' 'அருட்பெருஞ் சோதி அட்டகம்' ஆகிய நான்கு பதிகங்கள் முழுமையாகவும், மற்றுமுள்ள பதிகங்களினின்றும் கீர்த்தனங்களினின்றும் பிள்ளையார், முருகன், சிவபெருமான், உமையம்மை, அம்பலவாணர், திருமால் ஆகிய தெய்வங்களைப்பற்றி வள்ளலார் பாடியுள்ள பாடல்களுள் சிலவும் இடம் பெற்றுள்ளன. விலை 2-25

உயர்ந்த பரிசுப் பதிப்பு விலை 4-00

இலக்கணச் சொற்பொருள் விளக்க அகரவரிசை – பகுதி–க (எழுத்தும் சொல்லும்)

— தொகுப்பாசிரியர் : புலவர் இரா. இளங்குமரன்

இதன்கண் எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் அகர வரிசையில் விளக்கப்படுகின்றன. அகராதியைப் புரட்டி இலக்கியச் சொற்களுக்குப் பொருள் காண்பதுபோல இதன் துணைகொண்டு சொல்லிலக்கண விளக்கங்களை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

விலை 8-75

வெளிவரவிருக்கும் நூல்கள்

திருப்புகழ் (முழுவதும்)—விளக்க அடிக்குறிப்புகளுடன்

காக்கைபாடினியம்—பதிப்பாசிரியர் புலவர் இரா. இளங்குமரன்

இலக்கண விளக்கம் பொருளதிகாரம் விளக்கம்

—புலவர் சேயொளி

பதிவு எண் : M. 4899

பிற பதிப்பாளரின் வெளியீடுகள்

கவுந்தி—*சாமுவேல்தாசன்*

சிலப்பதிகாரத்தில் வரும் கவுந்தி அடிகளைப் பற்றிய ஒரு சிறந்த திறனாய்வு நூல். 6 00

திருவள்ளுவர் நாடகம்—*நாரண துரைக்கண்ணன்*

திருவள்ளுவரைப் பற்றிய கருத்துகளை இந்நூலாசிரியர் நாடக வடிவில் வடித்துத் தந்துள்ளார். சுவைமிக்க நாடகம். 3 50

நெடுந்தொகைக் கதைகள்—*புலவர் அரசுமணி*

தமிழில் அகத்துறையை விளக்கும் நூல் அகநானூறு. அதனை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்ட கதைகளின் தொகுப்பு. 5 00

திருக்குறளில் வேளாண்மை—இல. செ. கந்தசாமி, எம்.ஏ.

திருவள்ளுவர் வேளாண்மையின் மாண்பினைப் பற்றிக் கூறியிருக்கும் கருத்துகளை இந்நூலாசிரியர் தம் நுண்மாண் நுழை புலத்தால் விளக்கி அரிய நூல் செய்துள்ளார். 3 00

புனைகதை வளம்—*எழில் முதல்வன் (இராமலிங்கம்)*

நாவலாசிரியர் பன்னிருவரைப் பற்றிய ஒரு திறனாய்வு நூல். 6 00

புதுக்குரல்கள் (கவிதைத் தொகுப்பு)

22 கவிஞர்களின் கவிதைகளினின்று சில எடுத்துக்காட்டுகளாகத் தொகுக்கப்பட்ட தொகுப்பு. 3 00

சோவியத் நாட்டில் கண்டதும் கேட்டதும்
—எஸ். என். சொக்கலிங்கம்.

சோவியத் நாட்டில் சுற்றுப்பயணம் செய்து தாம் கண்ட கேட்ட காட்சிகளையும், செய்திகளையும் செவ்வனே கூறுகிறார் இந்நூலாசிரியர். சோவியத் நாட்டு "நேரு விருது" பெற்ற நூல். 7 00

கம்பன் காவிய சாரம் : எஸ். நல்லபெருமாள்

கம்பராமாயண பாலகாண்டத்தினின்று வடித்து எடுக்கப்பட்ட காவிய நயங்களின் தொகுப்பு. 7 00

வேருக்குநீர்—*ராஜம் கிருஷ்ணன்*
(சாகித்ய அகாதமியின் விருதுபெற்ற நூல்)

அரசியல் அடிப்படையில் புனையப்பட்ட ஒருபுதினம் 5 00

அப்பர் அச்சகம், சென்னை-1.